உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உஎ.] விபவஹு மாசிமீ [பகுதி—ச.

Vol. XXVII. February-March 1929. No. 4.

சேரர் தாயமுறை.

[திருவாளர் ச. சோமசுந்தரபாரதியாரவர்கள் M.A., B.L., எழுதியது.]

க. முன்னுரை.

கழிந்த ஐந்நூற்றாண்டுகளுக்குமேலாகக் கேரளத்திற் பல வகுப்பார் பெண்வழியில் மருமக்கட்டாயமுறைபேணுவதைக் காணுகின்றோம். நாம் அறிய இவ்வழக்கம் நாயர்பெருமக்களிடைமட்டுமில்லை; தென்திருவாங்கூரில் நாஞ்சில்நாட்டுவேளாளர்முதல் வடமலையாளத்தில் மகம்மதியமாப்பிள்ளைமாரும், பொய்பானூர்க்கூற்றத்துப் பார்ப்பன நம்பூரிகளும், தென்கன்னடத் தொன்மக்கள்பலரும், துளுவர் கொங்கணர்சிலரும் இத்தாயமுறையையே நெடுநாளாகக் கையாண்டுவருகின்றனர். இவ்வழக்கமுடையாரெல்லாரும் குடமலைக்குமேற்கே பண்டைச் சேரநாட்டின்பகுதிகளான மேலைக்கடற்கரைநாடுகளிலே இருப்பதாகவும் அறிகின்றோம். பார்போசா, சோனரத்து முதலிய ஐரோப்பியயாத்திரிகர் மேலமலைத்தொடருக்குமேற்குநிலமக்கள்பலர்தம்முள், பிறிதிடத்திற் காணரிய இப்பெண்வழித்தாயம் பெரிதும்வழங்கப்பெறுவதைப்பார்த்து அதிசயித்துத் தம் யாத்திரைக்குறிப்புக்களிற் சேர்த்திருக்கின்றனர்.

இக்கேரளவழக்கத்தை நாம் அறிவோம். எனினும் இது புதிதாகக் குடபுலத்தில் எப்படியோ வந்தேறிநடக்கும் ஒரு இடைக்காலவழக்கமெனக்கொண்டு வாளா அமைகின்றோம். சேரநாடு தமிழகத்தின்பகுதியென்றும், சேரர்பரம்பரையிலும் மற்றைத் தமிழ்வேந்தர்குடிமரபாம் மக்கட்டாயமே பண்டைநாளில் அடிப்பட்ட பழவழக்காய் ஆட்சிபெற்

திருந்ததென்றும் நாம் நம்புகின்றோம். எப்படியானாலும், சங்ககாலத்துக்கு நெடிய பலநூற்றாண்டுகளுக்குப்பின்னரே சேரநாட்டில் மருமக்கட்டாயமுறை புதுவழக்காய்ப் புகுந்திருக்கவேண்டுமெனக் கொள்கின்றோம். அப்படி நாம் கொள்வதால் அதன் உண்மையினை எனைத்தளவும் ஆராய்தற்கு அவசியம் நாம் காணகில்லோம். நம்மிடத்து இம்மனநிலைக்குத் துணையாகும் காரணங்கள் பலவுண்டு. எதனையுமே துருவாமற் கண்டபடி கொண்டமையும் இயல் நமது பெரியமாட்சி. ஊழொன்றிற் கிறைமை கொடுத்து, ஊக்கத்தை அறத்தொலைத்துப் பாழொன்றப் பொறுமையுடன் பலதுறைகளிலும் நாம் பயின்றுவருகின்றோம். இப்படிப் பழையபழக்கத்தால் நாம் பெற்ற பயன் பலவற்றுள் உண்மைகளைத்தேடுவதிற் பெருவெறுப்பும் கையறவிற் கழிவிருப்பும் என இரண்டாம். இவ்விரண்டும் நம் மனத்தில் நாளடைவில் மிகத் தடித்து வேரூன்றி வளர்கின்றன. மேலையர்கள் கண்டளந்துசொல்லுமுன்னே நமது பழஞ்சரிதங்களை நாம் உணரோம். நம்மிடையே கிடையாத நமது அரிய பழநூல்களெல்லாம் இன்றளவில் லண்டனிலும் பாரிசிலும் இருக்கப் பார்ப்போம். நமது தற்காலநிலைக்கு இவ்வாறு உண்மைநலம்பேணாத பெருநோதுமல்மனப்பாங்கைச்சிறிதல்லாச்செம்பாதி காரணமாக்கூறல்கூடும்.

பார்ப்பனருக்கும் பணமுடைய மேல்வகுப்பார் பலருக்கும் பெண்டிரெல்லாம் மணமற்ற இன்பத்திற்குத் துணையாகி வாழவேண்டும் என்ற இழிவழக்கம் கேரளத்தில் வடமுனிவர் பரசுராமர் அந்நாட்டார் நலம்பேணிப்புகுத்தியதாய் நம்பூரிமார் சிலர் நவில்வதனைப் பழமறைபோற் கொள்ளுகின்றோம். சங்கநூல்கள்யாதொன்றும் நம்மரபின் மாறாய தாயமுறை சேரருக்குச் சுட்டிலதென்று ஒருதலையாத் துணிகின்றோம். இவைகொண்டு மருமக்கட்டாயமுறை சங்ககாலத் தமிழ்ச்சேரர்க் கில்லாத பின்பெழுந்த புதுவழக்கமென்று அதனிற் சங்கையற்றுத் தெளிந்திருப்போம்.

நாம் அறிய நெடுங்கால ஆட்சியுடைய வழக்கொன்றைப் புதியதெனத்தெளிவிக்கும் தக்க சான்று காணுமட்டும், வழங்குமிடத்து அது நிலைத்த பழவழக்காய்க்கொள்ளுவதே ஆராய்ச்சித்துறையில் அறிவுடைய நெறியாகும். தொல்லைச் சேரர் கையாண்ட தாயமுறைக்குத் தமிழகத்திற் பழம்புலவர் ஏதேனும் குறிபுகாக் காணுவமேல், அதன் உண்மை

ஆராயத்தக்கதாகும். சேரர்குடிப்புகழ்விரிக்கும் தொன்னூல்கள் சில வற்றுள் இதுபற்றிச் சான்று சிறிதுள்ளதென ஊகித்தற்கு இடமுண்டு. ஊன்றிநோக்கில் இந்நூல்கள் சிலவற்றுள், பழஞ்சேரர்பாரம்பரையில் மக்கள்வழி பேணப்படாமல் தற்காலக் கேரளத்தார் கையாளும் மருமக் கட்டாயமுறையே வழங்கியதாய்க் கரிகூறும் சான்றுண்மை காணுகின் றோம். உண்மையினை உணர்தற்குக் காய்தல் உவத்தல் இல்லாத நடு நிலையில்நின்று நாம் ஆய்தல்வேண்டும்.

உ. தாயமுறை நியமங்கள்.

ஆயுமுன்னர் நாம் அவசியம் அறிந்துவைக்கவேண்டியதாய் இவ் வாராய்ச்சிக்கு உதவுவதாய தாயமுறைவழக்கங்கள் சிலவற்றை வரை யறுத்துத் தெளியவேண்டும். கேரளத்தில் வழங்கிவரும் மருமக்கட் டாயமுறைக்கு அடிப்படையாயுள்ள சில வருமாறு:—

(1) ஆண்வழியிலன்றிப் பெண்வழியிலேயே உறவுமுறையும் கிளை மரபும் ஆட்சிபெறும் தாய்மாரே குடிபேணும் அடிமரமாய்க் கருதப்படுவர். கிளைவளமும் குடிநிதியும் பெண்வழியே தழையும்வகை முறைவகுத் துக் குடியறங்கள் நிற்பதாகும்.

(2) மக்களெல்லாம் தாய்க்குடியின் கிளைஞராவர்; அக்குடியில் தம் மாமன்மார்க்குரிய வழித்தோன்றல்களாய் வான்முறையே உரிமை பெறுவர். மருகருள்ளே வயதுநிரல்வரிசையிலே வான்முறையாய்த் தனித்தனியே குடியாளும் தலைமை கொள்வர்.

(3) தற்கால நாகரிகப் புதுமாற்றம் சில புகுந்து பழவழக்கைப் பிறழ்வித்துத் தடுமாறச்செய்யுமுன்னே, கேரளத்திற் குலநிதியைப் பிரித்தாளும் பிறப்புரிமை ஆண்மக்கட்கு ஒன்றும் இல்லை. தாய்வழிகள் பிரிந்து சில புதுக்குடிகள் தழையலாகும். குடிதோறும் பொதுநிதியம் பிரியாமல் வளர்வதாகும். பெண்களுக்கு நிதியாட்சியுரிமை இல்லை. குடிநிதியின் பயனுகர்ந்து பொதுவாழும் உரிமை, அக்குடியிற்பிறந்த வர்கள்-ஒருதாயின்வழியினர்கள்-இருபாலார் எல்லார்க்கும் பொதுவுடை மையாகநிற்கும். பொதுக்குடியைத் தருவாடு என்று அந்நாட்டார் தற்கால மொழிவழக்கிற் சொல்லுகின்றனர்.

(4) தருவாட்டின் (குடியின்) தலைமை அதன் நிதியாட்சி மேற்கொள்ளும் உரிமையெல்லாம் மருகருள்ளே படிப்படியாய் வயதுமுறை வரிசையினில் வழிமுறையே வந்திறங்கும். சோதரிமார்தாயரெல்லாம் இம்முறையில் ஒப்புரிமைச் சோதரராய் வயதுமுறைவரிசையினில் ஒவ்வொருவராக இதை ஏற்கலாவர். அவர்கட்குப்பின் அவர் தாய்மாரின் பெண்மக்களீன்றுடைய ஆண்மக்கட்கு அவ்வுரிமை அம்முறையே வந்திறங்கும். குடித்தலைமைபெற்று அதனை ஆள்வோரைக் காரணவர் என்றும், அவருக்குப்பின் அக்குடியில் அவ்வுரிமையடைதற்குரியவரை அநந்தரவர் என்றும் இன்று கோளத்தில் இத்தாயமுறை வழங்குங் குடிகளிலே கூறிவருவர். மருகரெல்லாம் வயதுமுறைவரிசையினில் வழிமுறையே இவ்வுரிமை வரப்பெற்றுத் தத்தம் முறையில் ஒவ்வொருவரும் அத்தலைமைமேற்கொண்டு காரணவராகித் தம் கடனாற்றிக் கிளை தாங்கிக் குடியோம்பி (தருவாட்டைப் பேணி) ஆள்வர்.

(5) கோளத்திற் கோக்குடிகள்தம்முள்ளும் நாடாளுங் கோவுரிமை, குடியாவார்தங்கள் சிறுகுடித்தலைமையுரிமையைப்போலவே மருகர்வழியே வரிசைமுறையில் வருவதாகும். கோக்குடியிற் பெண்கள், சில தகவுடைய குறுமன்னர்குடியினரை மணந்து வாழ்வார். எனின் மனைவியர்க்குக் கணவர்குடிகளில் உறவுக்கடன் உரிமை பதவிகள் ஒன்றும் இல்லை. பெண்களெல்லாம் பிறந்தகுடியின்மட்டுமே கிளை உரிமை கடமைகளும் உரியநிலை மேதகவும் உடையராவர்.

(6) ஆண்மக்கள் தம் தந்தையர்க்குப் புதல்வரெனினும், அன்னார் குடிசிறக்க வழிநிற்கும் உரிமைபெறும் பிறங்கடையர் (வாரிசு) ஆகமாட்டார். அத்தந்தையர்க்கு வழித்தோன்றலாவார் அவருடன்பிறந்த பெண்வயிற்று மருகரேயாவர். ஆகவே ஆண்மக்கள் தத்தம் மாமன்மார்க்கு மட்டுமே வழித்தோன்றல்களாகிநிற்பர்.

இவை பலவும் மருமக்கட்டாயமுறைக்கு நிலைக்களமாய் அதனோடு ஆட்சிபெறும் அறவழக்காம். இதை மறவாமல் மனத்திருத்தித் தொன்னூல்களின் உதவிகொண்டு பழஞ்சேரர்பாரம்பரையில் வழங்கியது இத்தகைய மருமக்கட்டாயமா? நாம் ஆளும் மக்கட்டாயமா? என்றதொரு சிற்றாராய்ச்சியில் இறங்குவோமாக.

௩. ' சங்கநூற்சான்றுகள்.

இவ்வாராய்ச்சிக்குத் துணையாகும் சான்றுகள் பல. அவற்றுள், சங்கநூல்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதிற்றுப்பத்தே தலைசிறந்தது. சேரரைச் சோழபாண்டியருடன் சேர்த்துப்பாடும் பிறநூல்கள்போலாது, இது முழுதும் தனியே சேரரையே பாராட்டுவதாகும். பத்துப் பழம் பெரும்புலவர் ஒவ்வொருசேரனையும் பப்பத்துப்பாட்டிற் பாராட்டிப் பாடிய பாக்களைத் தொகுத்துப் பதிற்றுப்பத்து எனும் பெயரால் நின்று நிலவ வைக்கப்பெற்றதொரு தொகைநூல் இது. இதில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடையாமல் இடைபெட்டுப்பத்துப் பாட்டுக்கள்மட்டுமே வெளிவந்துள்ளன. இவற்றின் ஒவ்வொருபத்துப்பாட்டின் தொகை யிறுதியில் அப்பாட்டுடைக் கோச்சேரனின் குடிவழியும் அவன் வெற்றி முதலிய சில பிறசிறப்புக்களும் அடங்கிய பதிகமொன்று சேர்க்கப் பட்டிருக்கிறது. ஆகவே சேர்குலமுறை தெளிவதற்கு இப்பதிகங்கள் மிகவும் உபகாரப்படும். இப்பதிகப்பாட்டுக்களின் அடிகளையும் தொடர் களையும் ஆதாரவாகக்கொண்டே பண்டிதர்பலரும் இதுகாறும் இச்சேரர் குலமுறை கிளத்தியுள்ளனர். அதனால் ஈண்டு அவ்வடிகளையும் தொடர் களையுமே முதலில் நாம் ஊன்றிநோக்கி அவற்றின் பொருளும் குறிப்பும் ஆழச் சூழ்ந்து தெளியக்கடவேம். அவை,—

1. இரண்டாம்பத்து:—இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
யின்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி யீன்றமகன்"

2. மூன்றாம்பத்து:—பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடியது.

"இமைய வரம்பன் தம்பி அமைவர"

3. நான்காம்பத்து:—களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியது.

"ஆராத் திருவிற் சேரலாதற்கு
வேள் ஆவிக் கோமான்
பதுமன் றேவி யீன்ற மகன்"

4. ஐந்தாம்பத்து:—கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனைக் காண மமைந்த காசறுகாட்சிப் பாணர்பாடியது.

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்றமகன்"

5. ஆறும்பத்து:—ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது.

"குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்
ஆவிக் கோமான் றேவி யீன்றமகன்"

6. ஏழாம்பத்து:—செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடியது.

"மடியா வுள்ளமொடு மாற்றார்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி யந்துவற் கொருதந்தை
யீன்றமகள் பொறையன் பெருந்தேவி யீன்றமகன்"

7. எட்டாம்பத்து:—பெருஞ்சேரவிரும்பொறையை அரிசில்கிழார் பாடியது.

"பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன்றேவி யீன்றமகன்"

8. ஒன்பதாம்பத்து:— இளஞ்சேரவிரும்பொறையைப் பெருங் குன்றூர்கிழார் பாடியது.

"குட்டுவ னிரும்பொறைக்கு மையூர் கிழாஅன்
வேண்மாள் அந்துவஞ்செள்ளை யீன்ற மகன்"

என்பனவாம்.

இவையிற்றை உற்றுநோக்குங்கால், பதிகம் எட்டனுள் இரண்டு, நான்கு, ஆறுமுதல் ஒன்பது ஆன ஆறுபதிகத்தொடர்களால் அவ்வப் பதிகப்பாட்டுடைத்தலைவனான கோச்சேரன் ஒவ்வொருவனும், ஓரோர் கோமாள் (கோக்குடிப்பெண்) தன் கணவனுக்கு மகனும் மற்றொரு கோச்சேரனுக்கு வழித்தோன்றலுமாய்ப் பெற்றெடுத்த பெருமகனாகவே தோன்றுகிறது. மூன்றும்பதிகமான மற்றொன்றும் அதனையே வலியுறுத்தும். ஏனெனில், அதிற் பாடப்பெற்றவன்

இரண்டாவதன்தலைவனான இமையவரம்பனுக்குத் தம்பி யெனப்படுவதால், இப்பதிகமும் இரண்டாம்பதிகச்செய்யுள்கூறும் குல முறையையே கூறுவதாகும். எஞ்சிய ஐந்தாம்பதிக அடிகள் சிறிது சங்கைக் கிடனாக நிற்கின்றன. இதில் ஏதோ ஒரு சொற்குறைவு காணப்படுகின்றது. அக்குறையால் இப்பதிகத்தொடர் இதுவரை சிறிது பிறழ்ச்சி யுணர்ச்சிக்கு ஒருவாறு இடம்தந்துவருகிறது. இப் பதிகத்தொடர்களெல்லாம் பொருள்நேர்மையால் ஒருதிறப்படுமாயி னும் சொன்னீர்மையாற் பலதுறைப்பட்டுநிற்கின்றன. 4, 6, 8, பதி கங்கள் ஒருவகை; 2, 9 ஒருவகை; 3-வது தனிவகை; 7-வது ஒரு வகை; 5-வது ஒருவகை; ஆக இவைகள் இப்படிப் பலபட அமைந்து கிடப்பதால், இப்பதிகத்தொகுதியை இம்முறையிலேயே பகுத்து, தனித்தனியே அவ்வத்தொடர்வகைகளின் சொல்லாற்றலையும் பொரு ளாக்கத்தையும் ஈண்டுச் சிறிது ஆழத் தருவி ஆராயப்புகுவோம்.

I. பதிற்றுப்பத்தின் ச, சூ, அ ம் பதிகத்தொடர்களின் பொருட்குறிப்பு.

(1) முதலிலே, நான்கு ஆறு எட்டுப் பதிகப்பாக்களில், அப் பாட்டுடைத்தலைவரின்தாய் அங்குப் பெயர்குறித்த சேரல்லாத பெருந் தகையார் பிறர் ஒருவரின்தேவியெனச் சுட்டப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கது. இதுவரை இப்பதிகங்களைக்கொண்டு சேர்குலமுறைகண்ட பண்டிதர்கள், ஈண்டுத் தேவி என்ற சொல்லை, விசாரியாமலே தநயை என்னும் பொருளுடையதுபோலவே கருதிச்சென்றிருப்பதாகத் தெரிகிறது. இச்சொல், தெய்வங்களில் பார்வதி, காளி, துர்க்கை என் பாரையும் மக்கள்வருக்கத்துள் மனைவியையும்மட்டுமே குறிப்பதாகும். தேவி என்ற சொல்லுக்கு மனைவிப்பொருளல்லது மகள் அல்லது தநயை என்ற பொருள் இல்லை. இலக்கியம் திவாகரம் நிகண்டுகள் ஆதிய நூல் களில் மகட்பொருளில் இச்சொல்லுக்கு ஆட்சி இல்லை. எனவே, இச் சொல் இயல்புவழக்கில் மனைவியையே சுட்டவேண்டும். ஆகவே 4, 6, 8 பதிகங்களிற் சுட்டப்படும் கோச்சேரர்தாய் வேள்-ஆவிக்கோமானின் மனைவியாகவேண்டும். அதனாலே இவள் வேறு சேரருக்கு மனைவியா யிருந்திருக்கமுடியாததாகும்.

(2) நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், பெருஞ் சேரலிரும்பொறை என்ற மூன்று கோச்சேரர்களை யீன்ற தாயை வேள்

ஆவிக்கோமான்பதுமனின்தேவி என்றே இம் மூன்றுபதிகங்களும் விசதமாக விளக்குகின்றன. எனவே பதுமன்மனைவியான இக்கோப் பெரும்பெண்டு இப்பதிகங்களிற்பாட்டுடைத்தலைவருக்கு முன்தோன்றல் களாகக் குறிக்கப்படும் சேரலாதன், செல்வக்கடுங்கோ என்ற இருபெருஞ் சேரமன்னருக்கும் அறக்கிழத்தியாமாறில்லை. தேவிச்சொல்லுக்கு இல்லாத தநயைப்பொருள் கொடுத்துவைத்து வேள்-ஆவிக்கோமான் பதுமனுக்கு இவளை அவன்பெற்றமகளெனவேகொண்டாலும், இவள் இருவேறுசேரருக்கு இற்கிழத்தியாகும்முறை பெறுமாறில்லை.

(3) இம்மூன்றுபதிகத்தும் குறிக்கப்பெற்ற வேள்பதுமன் ஒருவனேயாகவேண்டும். வெவ்வேறு வேண்மானைச்சுட்டுவதான குறிப்பு ஒன்றும் இவற்றுள் இல்லாதநிலைமையில் இவை ஒருவனையே சுட்டும் எனக் கொள்ளுவதே முறையாகும். அன்றியும், பண்டிதர் திரு. மூ. இராகவையங்காரவர்களும் பிறரும் இம்மூன்றுபதிகமுமே ஆவிக் கோமான் பதுமனெனும் ஒரு வேளிர்தலைவனையே குறிக்குமென விளக்கி யுள்ளார்கள். இயற்பொருளில் இப்பதிகத்தொடர்கள் சுட்டுகிறபடி இப் பதிகச்சேரரின் தாய் 'பதுமன்தேவி'யாவளேல், சேரலாதன், கடுங்கோ என்ற இருவர்தமக்கும் இவள் மக்களீன்றாள் என்று உரைப்பதற்கு, தன் பதியாகும் பதுமனொடு மற்றிருவர்சேர்க்கையும் இவட்கு ஏற்ற வேண்டும். பதுமனுக்கு இவளைத் தநயை எனக் கொள்ளினுமே இரு பெருங்கோச்சேரருக்கு அறத்துறையில் இவள் மக்கள்பெறுமாறில்லை. ஒருவேளை பெற்றாலும் அப்பெற்றி உலகறிய வசைநிற்கப் பாட்டின் கண்ணே அதைப் புலவர் பாடமாட்டார்.

(4) இவளை வேள்பதுமனுக்கு மகளாக்கிச் சேரர்பலர்சேர்க்கை இவட்கு எய்தாமல் அகற்றவிரும்புவோர்கள், பதுமனை ஈங்கு இரு மகளிர்ப்பெறுவித்து, ஒருத்தியைச் சேரலாதற்கும் மற்றவளைக் கடுங் கோவுக்குமாகப் பிரித்து மணம்புரிவித்து விழவுகொள்வர். மூலத்தில் இருமகளிர் எனும் குறிப்பே எங்கும் இல்லை. மூவேறுபதிகத்திற் குறித்த வேள்-ஆவிக்கோமானை, மூன்றில் ஒன்றிற் பதுமன் என்ற பெயர் குன்றவந்திருந்தும் ஒருவன் எனத்துணியும் இவர், மூன்றிடத்தும் ஒருபடியே அவன் 'தேவி' எனக் குறித்த கோமானை ஒருத்தியில்லை; இருவர் எனக் கொள்ளுவானேன். ஆவிக்கோமான்மனைவியை இங்கு அவ

னுக்கு மகளாக்கி, பதுமனை முன்மணந்தவனை மறுபடியும் கன்னியாக்கிப் புதுமன்றல்புரிவிக்கமுயலும்போது அதன்குறுக்கேவந்துபுகும் ஆபாசத்தொல்லைகளை விலக்குதற்கு ஒருத்திவிழாப்போதாமல் அவள் தந்தைக்கு இருமகளிருண்டாக்கி இருவரையும் இருசேரர்க்கு உரிய ராக்கி, அவர்தம்மால் மும்மக்கட்பெறுவித்து ஒருவகையாய் முறைப் படுத்த அவசியங்கள் எழுகின்றன. இவள் பதுமனுக்கு மனையாளாய் அவனுக்கே தநயர்களைப்பெற்றெடுத்துத் தங்கிளையிற் சேரருக்குப் *பிறங்கடைய (as heirs) மருகர்களாய் உதவுவதிற் கோமகட்குக் குறை யில்லை. குடிப்பழியும் கூறறகில்லை. மேலும், ஏழாம்பத்துப்பதிகத்தில் இத்தேவிச்சொல் தெளிவாக மனைவிப்பொருட்குறிப்பிலேயே வந்திருப் பதும் இங்குச் சிந்திக்கவேண்டும். ஆண்டு எனைத்தானும் இச்சொல் லுக்கு மனைவியல்லாத எப்பொருளும் பொருந்தாது. "அந்துவற்கு ஒரு தந்தையீன்றமகள்-பொறையன்பெருந்தேவி" என்று கடுங்கோவை ஈன்றதாயை அப்பதிக ஆசிரியர் விசதமாக விளக்கியுள்ளார். அந்துவன் தந்தைக்கு மகளும் பொறையனுக்குத் தேவியும் ஆவளென, அவளை ஈன்ற தந்தையோடும்கொண்டகணவனோடும் தனித்தனியே அக்கோமாட் டிக்கு உள்ளதொடர்பை விளக்கும் முறைப்பெயர்களைப் புலவர் பிரித்து விதந்துகூறியிருப்பதால், தேவிச்சொல் ஆண்டு எவ்வகையிலும் மக ளைக் குறிக்கவேமுடியாது;-மனைவியையே குறித்துத்தீரவேண்டும். பதிகங்களெல்லாம் ஒருபுலவராற் செய்யப்பெற்றன என்றே கொள்ளப் படுகின்றன. எப்படியும் எல்லாப்பதிகங்களிலும் ஒரேபொருளைக்குறிப்ப தாய் ஒருபடியானசங்கற்பத்திலேயேவரும் இத் தேவிச்சொல்லுக்கு யாண்டும் பொருந்துவதான மனைவிப்பொருளையே இப்பதிகங்களிலும் கொள்ளவேண்டுமென்பது நியதமாகிறது.

(5) இன்னும், இம் மூன்றுபதிகத்தும், கோச்சேரர்தாயாரைப் பதுமனுக்கு மகளாயும், சேரருக்குத் தநயர்தரும் மனைவியாயும் குறிப் பதுவே ஆசிரியர்கருத்தாமேல், சேரரொடு இவளை அறக்கிழமைதரும் சொற்கொண்டு சேர்த்திருப்பர். பதுமனுக்குத் தநயை எனத் தெளி விக்கும் சொற்பெய்யத் தவறி மிகத் தடுமாறி மனைவியதன்மருபெயரால் ஈங்கு இவளைச் சுட்டமாட்டார். இப் பதிகப்பாவலர்மூவருள் ஒருவர்

* பிறங்கடை - வழித்தோன்றல்=வாரிசு, பிறங்கடைய = வாரிசான.

குறையாநிறையும் கணவன்பாற் கழிகாதலும் உடையராய்க் கற்பரசியாய்ப் புகழ்சிறந்த நச்செள்ளையார் என்ப. அத்தகைய பெருந்தகையார், நிறைபிறந்து, மணந்தவனைத் தணந்து, தன் பெண்ணியலை மறந்து பிறமன்னர்பலரைக் கூடி மக்களைப்பெறுபவளை வாயாரப் புகழுவரோ? அல்லது அவள் இழிதகவைச்சுட்டித்தான் பாடுவரோ?

(6) பாட்டுக்களிற் பதுமனுக்குத்தேவி எனப் பகர்ந்தபின்னர், அவன்தேவி சேருடன்சேர்க்கையினால் அவர்தமக்கு மைந்தர்களைப் பெற்றாள் என்று உரைத்து அவளைப் பழிப்பதுடன், அவள் ஈன்ற கோச்சேரர்மூவர்புகழும் மாசுபட மூன்றுபுலவரும் பாடமாட்டார். பாடினரேல், ஒறுப்பதைவிட்டு அவர்பழிக்குப் பரிசில்தர அக்கோச்சேரர்மூவரும் கழிபித்தர்களாய் இருக்கவொல்லார். பாடினவர் பல வேறுபுலவரென்றும், பாடிப்பெற்ற பரிசில் அளவிறந்ததென்றும் இப் பதிகங்களே விளக்குவதைக் கருதுங்கால், பாடப்பட்ட கோச்சேரரின் குற்றமற்ற குடிப்பிறப்பினையும் அவர்தம் கற்புநிறை தாய்வயிற்றில் தந்தை வேண்மான்—ஆவிக்கோமாற்கு மைந்தராய்ப்பிறந்து தாய்வழியில் தலைசிறந்த சேரருக்கு மருகரென வழித்தோன்றிநின்றுயர்ந்த குறிப்பினையும் இப்பதிகத் தொடர்நிலைகள் சுட்டுவதைத் தெளியலாகும்.

இனைய பல நினையுங்கால் நான்கு, ஆறு, எட்டுப் பதிகங்களிற் புகழப்பெற்ற கோச்சேரர்மூவரும் ஆவிக்கோமான்பதுமனுக்கே மைந்தரும், சேரலாதன், செல்வக்கடுங்கோ இருவருக்கும் வழித்தோன்றிச் சிறந்த பெருமருகரும் தம் கோத்தாயின் வயிற்றுதித்து வளர்ந்த பெருமக்களும் ஆவர் எனத் துணிவதே கருமமெனத் தோன்றக் காண்பாம்.

II. உ, கூ-ம் பதிகத்தொடர்ப் பொருட்குறிப்பு.

(1) இனி இரண்டாவதாக 2, 9-ம் பதிகத்தொடர்களையும் அவை சுட்டும் பொருட்குறிப்பையும் நிதானித்தறிய முயல்வோம். இவை முறையே இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனை, "உதியஞ்சேரலாதற்கு வெளியன்வேண்மாள்-நல்லினி யீன்ற மகன்" என்றும், இளஞ்சேரலிரும்பொறையை, "குட்டுவன் இரும்பொறைக்கு மையூர்கிழான்வேண்மாள் அந்துவஞ்செள்ளை யீன்ற மகன்" என்றும் கூறுகின்றன. 2, 9 பதிகங்கள் அப்பாட்டுடைத்தலைவரின் தாய்மாரை 'வேண்மாள்-நல்லினி'

'வேண்மாள்—அந்துவஞ்செள்ளை' என்று சுட்டுகின்றன. இவ்விடங்களில் வேண்மாள் என்னுஞ்சொல் அத் தாய்மாரின் இயற்பெயரில்லையென்பது வெளிப்படை. நல்லினி, அந்துவஞ்செள்ளை என்பன அவர்தம் இயற்பெயரும், 'வேண்மாள்' என்பது அவ்விருவருக்கும் பொதுவாயதொரு சிறப்புப்பெயருமாயிருக்கவேண்டும். "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்-இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்னும் தொல்காப்பியச்சூத்திரவிதிப்படி, இவ்விருவர் இயற்பெயர்களுக்கும் முன்னிற்கும் வேண்மாள் எனும் பொதுச்சொல், கோமனைவி என்னும் பொருளுடையதொரு சிறப்புப்பெயரேயாதல்வேண்டும்.

(2) ''இன்னும் "வேண்மாள்" என்னும் சொல் கோவேந்தர் கோப்பெருந்தேவியரையும், கோவியலரர் முடிபுனையாக் குறுமன்னர்தேவியரையும் குறிக்கும் ஒரு பொதுப்பெயராய்ப் பழந்தமிழிலக்கியங்களிற் பலவிடத்தும் வழங்கக் காண்பாம். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் தம் தோத்தமையன் செங்குட்வன்கோமனைவியை "வேண்மாள்" என்று சுட்டியுள்ளார். ஆண்டு அச்சொல் அத்தேவிக்கு இயற்பெயர் என்று நினைப்பவரும் சிலருளர். உண்மையிலே இது அவளுக்கு இயற்பெயரன்றென்று எளிதில் தெளியலாகும்.

"வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
விளங்கில வந்தி வெள்ளி மாடத்து
*இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி"

---

*தம்பியைச்சுட்டும் "இளம்கோ"த் தொடரையும் வேண்மாளோடு சேர்த்துச் செங்குட்டுவன்தேவிக்கு "இளங்கோவேண்மாள்" எனும் தொடர்முழுதும் பெயராய்நிற்பதெனக்கொண்டு, அதனால் அவள் கோத்தேவி (பட்டமஹிஷி) யில்லை என்றும், மன்னன் பின்னர்மணந்த காதற்கிழத்தியாய் இருக்கவேண்டுமென்றும் நினைப்பாரும் உளர். அவர்கருத்துக்குப் போதிய ஆதாரவு இல்லாததோடு, அது பொருந்தாது எனவும் சிலப்பதிகார அடிகளை ஊன்றிநோக்குவோர்க்கு வெளியாகும். இளங்கோவடிகள் மாடத்தில் மன்னனுடனிருந்து, மலைகாணச்சென்று மீண்டதாய் அடிகளின் மருளற்ற செந்தொடர்கள் தெளிவிப்பதாலும், இளங்கோவடிகளைச்சுட்டாமற் கோத்தேவியைத் தனியே குறிக்கும் பிறஇடங்களிலெல்லாம் இவ் விளங்கோத்தொடர் தொடுக்காமல் வாளா "மாபெருந்தேவி" [காட்சிக்காதை-வரி-110] எனவும், "வதுவை வேண்மாள் மங்கல மடந்தை-மதியேர் வண்ணங் காணிய வருவழி" [நடுகற்காதை-வரி-51-52] எனவரும் அடிகளில் "வேண்மாள்" எனவுமே அடிகள் கூறிப்போவதானும், காட்சிக்காதையின் முதலில்வரும் மேற்குறித்த தொடரிலும் "இளங்கோ" என்பது வேண்மாளுக்கு அடையாகாமல் இளங்கோவடிகளையே குறிக்கும் என்பது மலையிலக்காம். மேலும், இளையமனைவி என்ற பொருளில 'இளங்கோவேண்மாள்' என்று குறிப்பதே அடிகள் கருத்தாமேல், அதே காதையில் பின் இவள் பெருங்கோப்பெண்டென்பதை விசதமாக்கி 'மாபெருந்தேவி' எனச் சுட்டியிருப்பது பொருந்தாதாகும். ஆதலாலும் இத்தொடர் இளங்கோவடிகளையும் கோத்தேவியான வேண்மாளையுமே குறிக்கிறதென்பது தெள்ளிதிற் கொள்ளக்கிடக்கிறது.

என்பன சிலப்பதிகாரக் காட்சிக்காதையடிகளாகும். சேரர்பெருமான் இயந்திரவாவி எழின்மாடத்தில் தம்பி இளங்கோவோடும் தனது தேவியோடும் ஓலக்கத்து எழுந்தருளியிருந்தவன், மலைவளம் காணுவமென அவரிருவருடனும் பரிவாரங்களோடும் புறப்பட்டான் என்று சுட்டும் குறிப்பின இவ்வடிகள்.

இன்னும் செங்குட்டுவன்மனைவி இக் காட்சிக்காதையிற் பின்னேரிடத்தில் 'மாபெருந்தேவி' எனவும், நடுகற்காதையில் மீண்டும் வாளா 'வேண்மாள்' எனவுமே குறிக்கப்படக் காண்கின்றோம். இதனால் 'வேண்மா'ளும், 'மாபெருந்தேவி'யும் கோமனைவி என்ற ஒருபொருள் குறிக்கும் இரு விசேடணங்களென வெளியாகிறது.

(3) மேலும், இளங்கோவுக்குச் செங்குட்டுவன் தமையன்; அதனால் குட்டுவன்கோத்தேவி அவருக்கு அண்ணியார் (மதனியார்) ஆக வெண்டும். தமிழகத்தில் தமையன்மார்மனைவியர்பெயரைத் தம்பியர் கூறுவது மரபில்லை; வழக்குமில்லை. கோவேந்தன்பெருந்தேவிக்குரிய மதிப்பும் தமிழ்மரபும் ஒருங்கேநின்று இளங்கோவடிகளை அவ்வியற்பெயரைச் சுட்டவொட்டாமல் தடுப்பது உறுதி. தமையன்பெயர் தன்பெயர்களைச் சொல்லுவதில் அத்தகையதடை கிடையாது. அப்படியிருந்தும் இவ்விடத்தில் இவர்களியற்பெயரைக்கூடக் கூறுமல், மன்னனை வாளா "வானவர்தோன்றல்," 'கோதை' எனவும், தன்னை 'இளங்கோ' எனவும் கூறிப்போகும் அடிகள், மன்னவன் கோமனைவியைமட்டும் அவள் இயற்பெயர்கொண்டுசுட்டுவர் எனக் கொள்ளுவதிற் பொருத்தமும் பொருளும் இல்லை.

(4) இதுவுமன்றி, இச்சொல், மன்னர்மனைவியரின் பொதுப்பெயராகுமென்பதை வலியுறுத்தும் சான்று சில இன்னும் உண்டு. தொன்னூல்களில் 'நன்னன்வேண்மாள்' 'உதியன்வேண்மாள்' என்ற பிரயோகங்களைக் காணுகின்றோம். ஈண்டு 'நன்னன்' 'உதியன்' என்ற சொற்கள் ஆண்பாற்பெயர்கள் என்பது ஒருதலை. அவற்றோடு 'வேண்மாள்' எனும் பெண்பாற்பெயர் தொடருங்கால் நன்னன்தேவி, உதியன்தேவி என்றே பொருள்படுவதாகும். அல்லாக்கால் இப்பெயர்த்தொடர்கள் பொருளற்றசொல்லின் வெறுங்கூட்டமாகும். இத்தெளிவுகண்டே மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்களும் தம் அரும்பத அகராதியில்

'வேண்மான்' என்பதற்குச் சிற்றரசன் எனவும், 'வேண்மாள்' என்பதற்குச் சிற்றரசன்மனைவி, முடியுடையரசன்மனைவி எனவுமே பொருள் குறித்துள்ளார்கள். இவ்வாறு 'வேண்மாள்' எனும் சொல், கோவேந்தர் குறுமன்னர்மனைவியர்க்குப் பொதுப்பெயராக வழங்குவதால் அது ஒருவருக்கும் இயற்பெயராகாமல் பொதுப்பெயரேயாதல்வேண்டும் என்பது ஐயமற்றதுணிபாய்க் கொள்ளக்கிடக்கின்றது.

(5) வேண்மாள் என்பது இயற்பெயராமேற் பிறிதுசொற்சார்பு வேண்டாமல் தன்னிலையில்நின்று அந்தப்பெயருடைய பெண்மகளைச்சுட்டல்கூடும். இவ்வாறு தனிவழக்கு இக்கிளவிக்கு எங்குமில்லை. வருமிடங்கள்தோறும் இது ஆண்பாற்சொற்கள்பிறவற்றைத்தழுவியேவரக் காணுகின்றோம். ஆண்பாற்பெயரொடு வாளாதொடருங்கால் அவ்வாண்மகனுக்குத் தொடர்புடையபெண்ணொருத்தியைச் சுட்டும் ஒரு சிறப்புமுறைப் பெயராவதன்றி, தொடர்புசுட்டவேண்டாத இயற்பெயராய்க் கொள்ளுவது பொருந்தாது, பொருள்தராது.

(6) •ஆண்பெயரொடு பெண்ணொருத்தியினியற்பெயரைப்புணர்க்குங்கால், அவ்விருவருக்கும் உள்ளதொருமுறைகுறிக்கும் சொற்பெய்து விளக்குவதே மரபாகும். இராமன்தேவி சீதை, இராமன்தாய் கோசலை, இராமன்மைத்துனி ஊர்மிளை என்று ஒருமுறைப்பெயர்த்தொடர்பு கொண்டே இருபாலார் இயற்பெயர்த்தொடர்கள் வழங்கப்பெறும். முறைசுட்டாமல் வாளா இராமன் ஊர்மிளை என்று இரண்டு இயற்பெயர்களைத் தொடுத்தால் ஒருபொருளுமறியாமல் மருளுதற்கே ஏதுவாகும். அத்தகைய பிரயோகம் வழக்காறில்லை; மரபிறந்த தவறுமாகும்.

(7) ஈண்டு இரண்டு ஒன்பது பதிகப்பாட்டுக்களில், 'வேளியன்–வேண்மாள்', 'கிழாஅன்–வேண்மாள்' என்று ஆண்பெயர்களோடு தொடர்ந்து பிறசொற்சார்பின்றி நிற்றலால், வெளியன், கிழான் இவ்விருவருக்கும் தனித்தனியே ஒருதொடர்புடைய பெண்களுக்கு வேண்மாட் சொல் முறைப்பெயராவது அங்கைநெல்லிபோற் றெளியப்படும். மற்றைய 4–6–8 பதிகங்களில் 'பதுமன்றேவி' 'ஆவிக்கோமான்றேவி' என்றிருப்பதேபோல், ஈண்டும், 'வேளியன்வேண்மாள்' 'கிழாஅன் வேண்மாள்' எனவே வருவதால், தேவிப்பொருளிலேயே வேண்மாட் சொல்லும் நிற்கிறதென்று ஒருதலையாத் துணியப்படும்.

(8) இனி, முறைப்பெயராய்க்கொண்டாலும், இதற்கு மனைவிப் பொருளைக் கொடுப்பானேன், மகட்பொருளிலேயே இதைக் கொள்ளுவோமென்பார்க்குச் சொல்லுவேம். மகள் என்னும் பொருளில் இச்சொல்லைக் கொள்ளற்கில்லை. தன்தமையன் செங்குட்டுவன்தேவியை, இளங்கோவடிகள் வேண்மாள் என்று உரைப்பதாலும், மகட்பொருளில் யாண்டும் இதற்கு ஆட்சியில்லாததாலும் மனைவியையே வேண்மாட்சொல் குறிப்பதாகும்.

(9) பதிற்றுப்பத்தின் பதிகங்களைச் செய்தவர் ஒருவரே என்பது அப்பதிகஇயல்பாற் புலப்படுவதாகும். திரு. மு. இராகவையங்காரவர்கள் போன்ற பண்டிதரும் அப்படியே கொள்ளுகின்றார்கள். இஃது எப்படியிருப்பினும், இந்நூலில் ஐந்தொழியப் பிறபதிகங்களிலெல்லாம் ஆசிரியர் ஆண்பாற்சொற்களோடு 'தேவி' 'வேண்மாள்' என்ற சொற்களைநிறுத்தி, அவைகொண்டே அங்குக்குறித்த பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ள முறையை விளக்கிப்போவதனால், இச்சொற்களிரண்டுமே மனைவி என்னும் ஒருபொருளில் முறைப்பெயராய்வருமாறு தெளியக் கிடக்கின்றது. இவ்வமைப்பால் 'தேவி' 'வேண்மாள்' என்ற இரு சொல்லும் ஒருநிலையில் ஒன்றையொன்று விளக்கி இரண்டற்கும் மனைவி எனும் முறைப்பொருளுண்மையை வலியுறுத்தும். சுருங்கச்சொல்லின் வேண்மாள் என்பது வேண்மானின் பெண்பாலாம். வேண்மான் என்னுஞ் சொல் சிற்றரசரான வேளிர் அல்லது குறுமன்னருக்குப் பொதுப்பெயர் என்று அறிவோம். ஆகவே வேண்மாள் என்பது குறுமன்னர்தேவியர்க்குப்பொதுப்பெயராய்க் கோவேந்தர்மனைவியர்க்கும் சில இடத்தே முறைப்பெயராய் வழங்குமென அறியலாகும்.

(10) 4-6-8 பதிகங்களில் தேவி என்னும் முறைப்பொதுப் பெயர்மட்டும்நின்று, அம்முறையுடையாளான பதுமன்தேவியின் இயற்பெயர் சுட்டப்பெறாமலிருக்கிறது. 2-9 பதிகங்களிலோ வேண்மாள் என்ற முறைப்பெயரோடு 'நல்லினி' 'அந்துவஞ்செள்ளை' எனும் இயற்பெயர்கள் தொடர்ந்து, 'வெளியன்மனைவி நல்லினி', 'மையூர்கிழான் மனைவி அந்துவஞ்செள்ளை' எனத் தெளிக்கப்படுகின்றது. இங்கு இவர்கள் இயற்பெயரைத் தனித்தனியே விளக்குவதால், இருவருக்கும் பொதுவான வேண்மாட்சொல் முறைப்பெயரேயாவதனை முன்னரே விளக்கியுள்ளேம்.

(11) இன்னும், வேண்மான் என்பதற்குச் 'சிற்றாசன்' என்றும், 'வேண்மாள்' என்பதற்குச் 'சிற்றாசன்மனைவி, முடியுடையரசன்மனைவி' என்றுமே பதிற்றுப்பத்து அரும்பத அகராதியில் மஹாமஹோபாத்தியாயசாமிநாதையரவர்கள் பொருள்குறித்துள்ளார்கள். அதனாலும் இச்சொல் இப்பதிகங்களில், சிற்றாசரான வெளியன், மையூர்கிழான் என்ற வேளிர்களின்மனைவிமாரையே சுட்டுகின்றதென்று துணியலாகும்.

(12) இவை பலவற்றாலும், இப்பதிகங்களில்வரும் வேண்மாட்சொல் மனைவிப்பொருளையே குறிக்குமென்பது விசதமாகும். ஆகவே இரண்டாம்பதிகத்தால் வேள்வெளியனுக்கு நல்லினி மனைவியென விளங்குகிறது. இனி இப்பதிகத்திலேயே இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன், வேள்-வெளியனுக்கும் அவன்வேண்மாள் நல்லினிக்கும் மகனென்று சொல்லப்படுதலால் அவன் உதியஞ்சேரலாதற்கு மகனுமாதில்லை; மருகனேயாவனெனத் தெளிகின்றோம். அதுவேபோல் 9ம் பதிகத்தாலும் இளஞ்சேரலிரும்பொறை வேள் மையூர்கிழானுக்கும் அவன்தேவி அந்துவஞ்செள்ளைக்கும் மைந்தனாய்க் 'குட்டுவன் இரும்பொறைக்கு மருகனேயாவனென அறிகின்றோம் "குட்டுவன் இரும்பொறை-குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையின் மாமன்" என்று மஹாமஹோபாத்தியாய ப்ரும்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் பதிற்றுப்பத்தின் அரும்பதமுதலியவற்றின் அகராதியிற் காட்டியிருப்பதும் இதனை வலியுறுத்தும்.

III. ௩-ம்பதிகத்தொடர்ப் பொருட்குறிப்பு.

இனி மூன்றும்பதிகத்தைப்பற்றிய தொல்லையில்லை. அப்பதிகத் ஆசிரியர் வாளாதலைவனான பல்யானைச்செல்கெழுகுட்டுவனைப் பதிக ஆசிரியர் வாளா 'இமையவரம்பன் தம்பி' என்றே சுட்டியமைவதனால், அவன் தன் தமையன் 2ம் பதிகத்தலைவனான நெடுஞ்சேரலாதனைப்போலவே வேள் வெளியன் தாயனும் உதியஞ்சேரலாதற்கு மருகனும் ஆவனென்பது எளிதறியக் கிடைப்பதாகும்.

IV. எ-ம் பதிகத்தொடர்ப் பொருட்குறிப்பு.

ஏழாம்பதிகத்தொடரோ நெடுங்கால இருளகற்றி, சேரர்குடித்தாயமுறையுண்மையைத் துலக்கும் ஒளிவிளக்காயிருக்கிறது. இவ்வுண்மையறிதற்கு இது மிகவும் துணையாவதாய்த்தோன்றுவதால் இதனைச்

சிறிது ஊன்றி ஆராயவேண்டுவது மிகவும் அவசியம். இக்கிளைமுறை கிளத்தும் தொடராவது: "அந்துவற்கு ஒருதந்தையீன்றமகள் பொறையன்பெருந்தேவியீன்றமகன்" என்பதே. இதிற் பாட்டுடைத்தலைவனான செல்வக்கடுங்கோவை ஈன்றதாய் பொறையன்பெருந்தேவியெனவும், அந்துவற்கு ஒருதந்தையீன்றமகள் எனவும் இப்பதிகஆசிரியர் தெளிவித்துள்ளார். இவர் கபிலர் எனவே கொண்டால், கபிலர் பொய்பாநாவிற் புலவராதலால் அவர்கூறுவது மெய்யென்பது ஒருதலை யாவர்கூற்றாயினும் இத்தொடர்கூறும்பொருளைத் தெளியமுயல்வோம். முதலில் அந்துவனும் கடுங்கோவின் அன்னையும் ஒருதந்தையீன்றமக்களென்பது துளக்கமற விளக்கப்படுகிறது. அதனால் அந்துவஞ்சேரற்கு அவள் சோதரியாவளென்று அறிகின்றோம். அதுவுமன்றி, அவள் அடுத்து உடனே பொறையன்தேவி எனவும் விதந்து விசேடிக்கப்படுகிறாள். அதனாலும் முன்கூறிய அந்துவற்கு அவள் மனைவியாமாறில்லை. இத்தொடர், இறுதியில் இவளீன்ற கடுங்கோவை அந்துவற்கு மகனெனவும் சுட்டுகிறது. இந்நிலையில் இவள் அந்துவற்கு மைந்தனீன்றுதருவது எப்படி? பொறையனுக்கு மனைவியாதலாலும், அந்துவனின் தந்தைக்கு மகளாகவே அந்துவனுக்கு இவள் சோதரியாவதாலும் இவள் அவனை மணந்து மகப்பெற முடியாது. மணவாக்காதலனாக அவனைக் கூடிக் கடுங்கோவையீன்றாளென்றால் அது, அவனையும் அவள்குடியையும் சுடும் பழியாவதல்லால், சேரர்குலம் தழைய அவள் மகனீன்று தந்தாளென நன்மக்கள் புகழத்தகுஞ் செய்தியில்லை அவள்பெற்ற கடுங்கோவை அந்துவற்குத் தநயனாக்குவதால் அவளுக்குச் சகோதரனுடன் விபசாரதோஷம் சம்பவிக்கும். இத்துணை விபரீதம்விளைக்கும் இக்கருத்தைவிட்டு வேறு செம்பொருள் உண்டாயின் அதைக் கொள்ளுவதே நமது கடமையாகும்.

இவ்வாக்கியத்தில்வந்துள்ள விசேடணச்சொற்களின் நிலையும் அமைப்பும் விபரீதப்பொருளுக்குச் சிறிதும் இடமின்றி, உண்மையை எளிதில் தெளிவிக்கின்றன. முதலிற் கடுங்கோவின்தாயை அந்துவனின் தந்தைமகளென்றுகூறியதோடமையாமல், மீண்டும் அவளைப் பொறையன்தேவி என இடைத்தொடர்கொடுத்தும் விசேடித்திருப்பதாற் புலவர்கருத்துச் சந்தேக விபரீதங்களுக்குச் சிறிதும் இடந்தராமல் விளங்குகிறது. அந்துவனின்சோதரியும் பொறையனுக்குமனைவியு

மான கோமாட்டி கடுங்கோவைப் பெறுகின்றாள். அவன் பொறைய னுக்குத்தநயனும் அந்துவற்குப் பிறங்கடையாம் மருமானு மாகின்றான். தெளிவான இத்தொடர்மொழிப்பொருளைமாற்றிக் கடுங்கோவை அந்து வனுக்கு மகனெனவே கொள்ளப்புகின் ஒருவனே மற்றொருவனுக்கு ஒருங்கே மகனும் மருகனும் ஆவன் என ஒரு அபூத அசம்பாவித விப ரீதத்தைக் கூறுவதாகமுடியும்.

எப்படியும் 'தேவி' என்பதற்கு மகளெனப் பொருள்கொண்டு இவளைப் பொறையனுக்கு மகளாக்க இடமில்லை. இவள் தந்தை பொறைய னில்லை; பொறையன்தேவியான இவளுக்குப் பொறையனல்லாத வேறு ஒரு தந்தை உண்டு என்றே பதிற்றுப்பத்துப் பழையஉரைகாரரும் பதிப்பாசிரியர் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்களும் கருதுகி றார்கள் என்பதை அவர்கள் உரைக்குறிப்புக்கள் விளக்குகின்றன.

'பொறையன்பெருந்தேவி' எனும் தொடர்கொண்டு பொறையனை இவளுக்குத் தந்தை எனக் கொள்ளக்கூடுமாயின், 'ஒருதந்தை' என்ற தற்குப் பொறையனாகிய ஒருதந்தை என்று இவர்கள் பொருள்கூறி யிருக்கவேண்டும். அதைவிட்டுப் 'பொறையன்தேவியின் பிதா' என்று பொருளுரைக்கமாட்டார்கள். அவ்வாறு இவர்கள் பொருள்கொண் டிருப்பதால், 'தேவி' என்றசொல்லுக்கு மகள் என்னும்பொருள் இவர்க ளுக்கு ஒவ்வாமையும் மனைவி என்ற பொருளே இவர்களுக்கு உடன் பாடும் ஆவதென அறிகின்றோம். ஆகவே, கடுங்கோவின் தாய், வேண்மான் பொறையனுக்கு மனைவியும், அந்துவன் தந்தைக்கு மகளுமே ஆவள் என இப்பதிகத்தொடரால் தெளிகின்றோம்.

அன்றியும், இத்தகைய ஐயம் எதுவுமே நிகழாவண்ணம் நிறுத்த சொற்செய்த புலவர் இதன் மெய்ப்பொருளை விளக்கிவைத்திருக்கிறார். அந்துவன் தந்தைக்குக் கடுங்கோவின்தாய் மகள் என முதலிற் கூறினார். மகள் எனும் சொல்லுக்கு மனைவி, பெண், தநயை எனப் பலபொருள் உண்மையால், பிற பொருந்தாப்பொருள்களை விலக்கி இவள் அவனுக்குத் தநயை என்பதைத் தெளிவிப்பதற்கு மகளுக்குமுன் 'ஒருதந்தையீன்ற' என்ற அடைகொடுத்தார், எனவே, அந்துவன் தந்தைக்கு இவள், அவன் பெற்ற தநயை என்பது மலைவிலக்காகிறது.

அப்படியே இவள்பெற்ற மகனை அந்துவற்குத் தநயனில்லை, மருகனேயாவனென்று தெளிவிப்பதற்காகப் புலவர் மீண்டும் இவளைப் 'பொறையன்தேவி' என்று விசேடித்து, 'தந்தையீன்றமகள்' என்பதற்கும்-(இவள்) 'ஈன்றமகன்' என்பதற்கும் இடையே விசேடண அடை கொடுத்துப் பிரித்து நிறுத்துகின்றார். இவ்வாறு அந்துவன், பொறையன், கடுங்கோ ஆகிய மூவருக்கும் இவளுக்கும் உள்ளமுறை நிரல் நிரையே தெளிக்கப்படுகின்றது. இவள் முதல்வனுக்குச் சோதரி, நடுவனுக்கு மனைவி, கடையனுக்குத் தாய் என்பது வெள்ளிடைமலையாம். எப்படியும் இத்தொடரால் அந்துவனுக்குக் கடுங்கோவின்தாய் மனைவியாதல் இயலாதென்பது ஒருதலை; எனவே, அவனுக்கு இவன் தநயனாகான், வழித்தோன்றலான மருமானேயாகவேண்டுமென்பது தெளியக் கிடக்கின்றது. மருமக்கட்டாயத்தைச் சுட்டுஞ் சான்று இதைவிட வேறு எப்படிக் காணமுடியும். இத்தொடர் மக்கட்டாயத்தோடமைவுபெற மறுக்கின்றது. கடுங்கோவை அந்துவனுக்கு மகன் என்று கொள்ள இத்தொடர் எவ்வாற்றானும் இடம் தாவில்லை: மருகனென்னும் ஒரு பொருளே இத்தொடருக்கு ஒருதலைபாய் அமைந்தபொருளென்பதை இத்தொடர்மொழிகள் நின்று பறையடிக்கின்றன. இப்பொருளிற் பிற பதிகத்தொடர்களெல்லாம் இதனோடு பொருந்தக் காண்பாம். பிறிது பொருட்கு இப்பதிகம் இடம்தராது. இந்நிலையில் இவையெல்லாம் ஒருங்குநின்று தெளிவிப்பது மருமக்கட்டாயமன்றி மக்கட்டாயமன்றென்று விளக்கமாகிறது.

V. ரு-ம் பதிகத்தொடர்ப் பொருட்குறிப்பு.

(1) இனி, எஞ்சிநிற்கும் 5-ம் பதிகமொன்று ஆராயக்கிடக்கின்றது, அதன்பொருளையும் ஒருவாறு அளந்தறிய முயலுவோம். இதில் கிளைக்கும் தொடர் "நெடுஞ்சேரலாதற்கு, சோழன்மணக்கிள்ளியீன்ற மகன்" என்று நிற்கிறது. இதில் நிரப்பவேண்டியசொற்குறையுண்மை புலப்படுகிறது. நிற்கிறபடி இச்சொற்றொடரில் பொருத்தமும் பொருளும் இல்லை.

(2) இதுவரையில், இப்பதிகத்தலைவனான செங்குட்டுவனை நெடுஞ்சேரலாதற்கும் சோழன்மகள் மணக்கிள்ளிக்கும் பிறந்தமகனென்று இத்தொடர் குறிப்பதாகப் பலரும் கொண்டமைந்தனர். அதாவது;

செங்குட்டுவனுக்குச் சேரலாதனைத் தந்தையும் சோழமணக்கிள்ளியைத் தாயுமாகக் கருதிவந்தனர். இம்முறைக்கு வேறு ஆதாரமிருந்தால் அதைக் கண்டபோது விசாரிப்போம். இதுவரையும் பலரும் இத் தொடரொன்றையே இதற்கு ஆதாரவாக எடுத்தாளப் பார்க்கின்றோம். இத்தொடர் இப்பொருள் தருமாறில்லையென்பதுமட்டும் இதைச் சிந்திக்கப்புகுந்தவுடன் தெளிவாகிறது.

(3) இப்போது நிற்குநிலையில் இத்தொடரில் செங்குட்டுவன் தாய் (பெயர்) குறிக்கப்படவில்லை. சோழன்மணக்கிள்ளி ஆண்பாற்பெயர், செங்குட்டுவன் தாய்பெயராகமாட்டாது. மணக்கிள்ளி என்பது அவன் தாயின் இயற்பெயராகவும், அவளை ஒரு சோழன்மகளாகவும் சிலர் கருதுவர். மணக்கிள்ளி என்னும் சொல் ஒரு பெண்பாற்பெயராய் யாண்டும் வழங்கக் காணற்கில்லை. அதற்குமாறாகப் பலவிடத்தும் கிள்ளி என்பது ஆண்பாற்பெயராய், சோழமன்னர்பலருக்குரிய சிறப்புப்பெயராய்வழங்கிவருவது பிரசித்தம். 'வெண்வேற்கிள்ளி', 'நெடுங்கிள்ளி', 'கழற்கிள்ளி', 'நெடுமுடிக்கிள்ளி', 'வடிவேற்கிள்ளி', 'இளங்கிள்ளி', 'மாவண்கிள்ளி', எனப் பலபெயருடைய சோழவேந்தரைச்சுட்டும் பாட்டுக்கள் சங்கநூல்களிற் பல காணலாம். இப்படிச் சிலமன்னரின் சிறப்புடைப்பெயராவதுமன்றி, சோழர்குடியரசருக்கே இது நிலைத்த ஒரு பொதுப்பெயராகவும் துலங்குகிறது. திவாகரத்தில், கோச்சோழன் பெயர்-"சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன்" என்று பல சேந்தனார் கூறிப்போவதனால், இச் சொல் சோழமன்னர் பொதுப்பெயராதல் தெளியப்படும். ஆகவே இப் பதிகத்தொடரில் மணக்கிள்ளியென்பது யாதொரு பெண்ணையும் குறியாமல் சோழன்பெயராகவேநிற்பதெனக் கொள்ள வேண்டும்.

பின்னும் மற்றைப்பதிகங்களிலெல்லாம் பாட்டுடைத்தலைவரின் தாய்மார்பெயர் சுட்டினும் சுட்டாவிடினும் தந்தையர்பெயர் தவறாமற் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது. அதன் சிறப்புக்காரணத்தைப் பின்னர் விசாரிப்போம். இவ்விடத்தில், மற்றப்பதிகப்போக்குக்கு மாறாக 5ம் பதிகத்தில்மட்டும் தந்தைபெயரைச்சுட்டாமல்விடவும், தாயைமட்டும் மணக்கிள்ளியென விதந்துகூறவும் தனிக்காரணம் ஒன்று மில்லை. பதிகங்களெல்லாம் ஒரே ஆசிரியர் செய்தனவென்றே ஊகிக்கப்

படுகின்றன. ஒருபுலவர் பிறஇடங்களிலெல்லாம் தான் கொண்ட முறையை இக்குமட்டும் கைவிடக்கருதுவானேன்? அவர் நன்றெனயாண்டும் கையாண்ட ஒருதுறையை நெகிழாமல் இப்பதிகத்திலும் பின்பற்றியதாகக்கொள்வதே முறையாகும்.

மற்றெல்லாப்பதிகங்களிலும் பாட்டுடைத்தலைவரின் தந்தையர்க்குரிய இயற்பெயரும் சிறப்புப்பெயரும் ஒருங்கே கூறப்படுகின்றன. அதுபோல் இதிலும் கூறப்பட்டிருக்கவேண்டுமெனக்கொள்ளுவது நியாயமாகும். அம்முறையிற் சோழன் என்ற சிறப்புப்பெயரின்பின் மணக்கிள்ளி என்று அவன் இயற்பெயர் சொல்லப்படுவது அவசியமும் பொருத்தமுமாகும்.

(4) இன்னும் அடியார்க்குநல்லாரும் பிறரும் செங்குவட்டுவன் தாய்பெயர் நற்சோணை என விதந்துகூறுகின்றனர். யாண்டும் அவர் மணக்கிள்ளி என்பது அவள்பெயரெனச் சுட்டவில்லை. இவை பலவற்றாலும் ஈண்டு மணக்கிள்ளி யென்பது செங்குட்டுவன் தந்தைபெயராக வேண்டுமென்பதே நிலைபெறுகிறது.

(5) ஆனல் சோழன்மணக்கிள்ளி சேரலாதற்குத் தானே மகப்பெறமாட்டான். ஐயனாரைப்பெறுவிக்கும் ஹரிஹரக்கூட்டம் மக்கட்கில்லை. பெண்ணின்றி இருபுருடர்புணர்ச்சியினால் புத்திரப்பேறெய்தற்கில்லை. அதனால், செங்குட்டுவனை ஈன்றதாயைச் சுட்டுஞ்சொல்லொன்று இத்தொடரில் இருக்கவேண்டுவது அவசியம்.

(6) இனி, மணக்கிள்ளியைப் பெண்பெயராகவே கொள்வதானாலும்கூட அப்பெயருடைப்பெண்ணுக்கும் சோழனுக்கும் உள்ள முறை குறிக்குஞ்சொல்லெதுவும் இல்லாததால் இத்தொடருக்குப் பொருளில்லாதாகிவிடும். இருவேறுபாலாரிருவரியற்பெயர்களின் வெறும் தொடையால் அவர்களின் முறையியைபு தெளியுமாறில்லை. ஆகையால் எப்போதும் அப்பெயர்த்தொடைகள் தம்மிடை இயைபுடைய முறைப்பெயரைப் பெறினல்லாற் பொருள்தராவாம். அதனாலும் இங்கு ஒரு சொற்குறைவு தெளியப்படும்.

(7) மேலும் 4, 6, 7, 8 பதிகங்களில் தேவி என்றும், 2, 9 பதிகங்களில் வேண்மாள் என்றும் முறைப்பெயர்கள்நின்றே அத்தொடர்கள் பொருள்பயத்தலால், அங்ஙனமே இவ்விடத்தும் அவைபோன்றதொரு

முறைப்பெயர்ச்சொல் இன்றியமையாததாகும். அதுவும் மற்றைப் பதிகங்களில் வந்தமைந்த முறைப்பெயர்ச்சொற்பொருளுடையதாக இருத்தலே பொருத்தமாகும். எனவே, அது, வேண்மாள், தேவி என்பவற்றுள் ஒன்றாகக்கொள்ளுவது தவறாகாது. 'தேவி' என்ற சொல் மணக்கிள்ளிக்கு முன் அல்லது பின் நிற்கவேண்டும். முன் வைப்பின் மணக்கிள்ளிச்சொல் பொருளின்றி நின்றுவற்றும். அது பெண்பெயராகாமையும் சோழன்பெயராகவேண்டுமென்பதையும் மேலே தெளிந்தோம். ஆதலால், தேவிபோல்வதொரு முறைப்பெயர் மணக்கிள்ளி என்பதன்பின்னும் ஈன்றமகன் என்பதற்கு முன்னும் நிற்பதுவே அமைவுடைத்தாம்.

அத்தகைய குறைநிரப்புஞ்சொற் பெய்து பாடங்கொள்ளின் இப் பதிகத்தொடர் தெளிவுபெற்றுச் சிறப்பதாகும். ஆகையினாலே இவ் விடத்தில் "சேரலாதற்கு, சோழன் மணக்கிள்ளி தேவி ஈன்ற மகன்" என்பதுபோன்றதொரு பாடம் கொள்வது அவசியமும் அழகு மாகும். இனையதொருசொல் நிரப்பப்பெறாதவரை இத்தொடருக்கு எப்பொருளும் தெளிதற்கில்லை. பெய்தமைத்தால் அது பொருந்தும் பொருள்தந்து சிறந்துநிற்கும். எனவே இப்பதிகத்தொடரால், செங்குட்டுவன் சோழனுக்குத் தநயனும் சேரலாதற்கு மருகனும் ஆவனெனத் தெளியலாகும்.

VI. மகட்சொல்லின் பொருள்விளக்கம்.

(அ) இந்தப்பகுதியை முடிக்குமுன்னே இங்கு நாம் கருதவேண்டிய பிறிதொருசெய்தியுண்டு. செங்குட்டுவனுக்குச் சேரத்தந்தையும் சோழத்தாயும் தருபவர் தமதுகொள்கைக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் மேற்கோள்வாக்கியம் ஒன்றுண்டு. சிலப்பதிகாரப் பாயிரவுரையில், "சேரலாதற்கு..................சோழன்றன்மகள் நற்சோணையீன்ற மக்களிருவருள் மூன்னோன்" எனச் செங்குட்டுவனை அடியார்க்குநல்லார் குறிக்கின்றார். இதிற்குறிக்கும் செய்திக்கு அவ்வுரையாசிரியர் கண்ட ஆதாரவை அவர் விளக்கினாரில்லை; என்றாலும், அவருரையின் இத்தொடரை ஆதாரமாக்கி, சேரலாதற்குச் செங்குட்டுவன் தநயனென வும் அவன்தாய் சோழன்மகளெனவும் சிலர் கருதுகின்றனர். இவர் கொள்கைக்கு ஆதாரமாய்க் காட்டுதற்கான இதனினும் சிறந்த

ஒரு மேற்கோளும் நான் காணுகின்றேன். இளங்கோவடிகளே தம் நாடகக்காப்பியத்தில் "திகழொளிஞாயிற்றுச் சோழன்மகளீன்றமைந் தன்..........................செங்குட்டுவன்"* என்று கூறுகின்றார். அடிகளைவிட அவர் குலமுறையைத் தெளிவிக்கப் பிறர்யாரும் அருக ரில்லை. அவர்வாக்கியத்தை எடுத்தெறிய அதிகாரம் எவர்க்குமில்லை. ஆகவே இவ்வாக்கியத்தால் தனக்கும் தன் தமையன் செங்குட்டுவனுக் கும் தாயாவாள் சோழன்தநயை என்றே ஏற்படுமானால், இதை ஒப்புக் கொண்டு பதிற்றுப்பத்துப்பதிகப்பாக்களின் ஆதரவைக்கூடப் புறக்க ணிக்கவேண்டிவரும். ஏனெனில் அப்பதிகப்பாவலர் சேரர்குலத்துக்கு அந்நியர். அடிகளோ அக்குடியிற் பிறந்து சிறந்த பெருந்தகையா ராவதோடு செங்குட்டுவனுக்கு உடன்பிறந்த தம்பியுமாவர். அதனால் இது சம்பந்தமாக அவர்கூற்றே ஏற்றபெற்றியதாகும். இவருடைய இவ் வாக்கியமே அடியார்க்குநல்லாருரைத்தொடருக்கும் ஆதாவாயிருக்கலா மெனவும் தோன்றுகிறது. ஆதலால் இத்தொடர்களின்பொருளை ஊன்றி ஆராயவேண்டுவது மிகவும் அவசியமேயாம்.

(b) அடிகளின் மூலவாக்கியத்திலும் அடியார்க்குநல்லாரின் உரைத்தொடரிலும் வருகின்ற 'மகள்' எனும் சொல் தநயைப்பொருளி லேயே நிற்குமாயின், இதுவரை நாம்செய்த ஆராய்ச்சியெல்லாம் விழல் நீராகும். அதற்கஞ்சி, அச்சொல்லுக்கு அப்பொருளே அமையுமாயின் அதைக்கொள்ளப் பின்னிடையும்பெற்றியில்லை. பதிற்றுப்பத்துப் பதிகத்தொடர்கள் ஈண்டு மகட்சொல்லைத் தநயை எனக் கொள்ளற்கு இடம்தருமாயின், சங்கையின்றிச் சேரருக்கு மக்கட்டாயமேயுள்ள தெனக் கொள்ளல்கூடும். பதிகங்களோ மருமக்கட்டாயத்தையே சுட்டு கின்றன. 7ம் பதிகத்தொடர் அறவே மக்கட்டாயத்தை மறுத்து மற்றதனையே வலியுறுத்துகின்றது. இவற்றையெல்லாம் மேலே விசாரித் தோம். பதிகம்பாடிய பழம்புலவர் பிழைத்தனரென்று அவர் பாக்களை எளிதிற் கழித்தற்கில்லை. என்றாலும் இளங்கோவடிகளின் சொற் றொடர் மக்கட்டாயத்தைமட்டுமே சுட்டுமாயின், அவரையே தழுவிப் பதிகப்பாவலரை நழுவவிடவேவேண்டிவரும். ஆனால் அப்படி நழுவ விடுமுன் அவர் பதிகத்தொடரும் அடிகள் சொற்றொடரும் தம்முள்

*வாழ்த்துக்காதை. உரைப்பாட்டுமடை. வரி—2, 3.

மாறுபடாமல்நின்றமையும் பொருளமைதிபெறக்கூடுமோ என்று விசாரிப்பது நம் முதற்கடமை. பெரும்புலவர்சொல்லாற்றல் மெய்ம்மை பிறழாமற்காக்கும் என்னும் மாபுண்மையை மறவாமல், முதலில் இவற்றை அமைத்துக்கொள்ளும்முயற்சியை நாம் மேற்கொள்வதே முறையாகும். எப்படியும் அமைதிபெற வழிகாணுதவரை இவற்றுட் சிறந்தது கொண்டு பிறவற்றைக் கழிப்பது இழுக்காது. இம்முறையை இங்கு நாம் மேற்கொண்டு அடிகளுடையவும் அவரைப்பற்றியெழும் அடியார்க்குநல்லாருடையவுமான சொற்றொடர்களைச் சிறிது ஊன்றி ஆராயப்புகுவோம்.

(c) இந்நெருக்கடியில் இவ்வாராய்ச்சிக்கு உதவியாக எதிர்பாராத இடத்திலிருந்து நமது ஐயஇருளகற்றவரும் விளக்கத்தைப் பெறுகின்றோம். சங்கப்புலவரான சாத்தனுர், செங்குட்டுவன் இளங்கோவடிகட்குச் சமகாலத்தவர்; அதுமட்டுமில்லை. அவ்விருவர்பழக்கமும் நட்பும் பெற்றவராவர். மாபத்தினியின் மறக்கற்பால் மதுரை அழலுண்டழிந்த பிறகு இவர் சேரநாடுசென்று வஞ்சியிற் கோச்சேரன்வண்மையும் இளங்கோவின்மதிப்பும்பெற்று வாழ்ந்துவந்தார். அக்காலத்தில் இவர் மணிமேகலை நூலை இளங்கோவுக்குப் பாடிக்காட்டியும், அடிகளின் சிலப்பதிகாரத்தை அவர்பாடக் கேட்டும், ஒருவர்நூலையொருவர் பாராட்டியதாகத் தெரிகின்றோம். அடிகளின் அங்கீகாரச்சிறப்புடைய மணிமேகலையுள் 'மகள்' எனும் சொல் மனைவி எனும் பொருளில் வழங்கப் பார்க்கின்றோம்.

> "நினக்கிவன் மகனுத் தோன்றிய தூஉம்
> மனக்கினி யாற்குநீ மகளாய தூஉம்
> பண்டும் பண்டும் பலபிறப் புளவால்"
>
> (மணிமேகலை காதை-22. வரி 29-31.)

எனும் அடிகளிற் சாத்தனுர் மணிமேகலையும் உதயகுமானும் பல முற்பிறப்புக்களிற் சதிபதிகளாக வாழ்ந்த விவரத்தை விளக்குகின்றார். இவ்வடிகளில் 'மகள்' என்பது மனைவியையே சுட்டிநிற்பது வெளிப்படை. மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்களும் இவ்வடிகளுக்குத் தாமெழுதிய குறிப்புரையில் மகள் என்பதற்கு மனைவியென்றே பொருள்வரைந்துள்ளார்கள். இதனுல் மகட்சொல்லுக்கு மனைவிப்

பொருள்வழக்குண்டென்பது தெளியப்படுகிறது. இன்னும், கணவன் மனைவியெனும்பொருளில் மகன் மகள் என்ற சொற்கள் வருமென்பதை 'நோதகவுண்டோ நும்மகனார்க்கினி' * என இளங்கோவும் 'கண்போன்ற மாமன்மகள்' † எனத் திருத்தக்கதேவரும் கூறுதலாலும், செய்யுளிலும் வழக்கிலும் 'மணமகன்'—'மணமகள்' என்ற பிரயோகங்கள் அடிப்பட்ட ஆட்சிபெறுதலாலும் நன்கறியலாம். ஆகவே, மகள் எனுஞ்சொல் மனைவியெனும் பொருளில் வருவது அருமையில்லை, ஆன்ற சான்றோராட்சியும் தமிழ்நன்மக்களிடை நெடுவழக்குமுடையதொன்றே யென்று தெரிகின்றது.

(d) இப்பொருளில் அடிகள்வாக்கும் அடியார்க்குநல்லார் உரைத்தொடரும் பதிற்றுப்பத்துப்பாக்களோடு எவ்விதப் பிணக்குமின்றிப் பொருந்தியமைகின்றன. சோழன்மகள் என்பதற்குச் சோழன்மனைவி யென்று பொருள்கொண்டால், சோழனுக்கு அவன்தேவியீன்றமக்கள் சேரனுக்குத் தாயாகார். மருகரேயாவரென்பது விசதமாகும். எனவே "சேரலாதற்குச் சோழன்மகள் ஈன்றமகன் செங்குட்டுவன்" என்ற பிரயோகத்தைமட்டும்வைத்துச் சேரலாதற்குச் செங்குட்டுவனை நேரே தநயனாகவும், சோழனுக்கு அவனை மகள்பிள்ளை போனாகவும் கொண்டு தீரவேண்டிய அவசியமேற்படவில்லை. எனவே, சிலப்பதிகாரத்தில்வரும் இம்மகட்சொற் பிரயோகம் பதிற்றுப்பத்துப்பதிகக்குறிப்புக்களோடு முரணுவதாகக் கொள்ளவேண்டா. இப்பதிகத்தொடர்கள் ஒருதலையாக மருகர் அல்லது வழித்தோன்றல்களையே சுட்டுவதாகவும், அப்பதிகத் தலைவர் சேரமன்னருக்குத் தாயாகார், மருகரேயாவாரென விளக்குவதாகவும் தெளியத் தெரிக்கின்றன. சிலப்பதிகாரப் பிரயோகங்களும் இத்தகைய முறையைத் தழுவி அமைவதாகக் காண்கின்றோம்.

இனி, 'நுந்தை தாணிழலிருந்தோய்நின்னை' என்று வரந்தருகாதையில் இளங்கோவும், 'நிமித்திகன் ....சேர்தி நீயெனச் சேரலற்குரைத்தவன் மைந்தரைநோக்கி நந்தாச்செங்கோ லந்தமிலின்பத் தரசாளுரிமை யிளையோற்குண்டென' என்று பதிகவுரையில் அடியார்க்குநல்லாரும், இமையவரம்பனையும் செங்குட்டுவன் இளங்கோ என்பாரையும்

* சிலப்பதிகாரம் - கொலைக்களக்காதை—வரி-17.

† சிந்தாமணி. பதிகம்-செய்யுள்-21.

முறையே 'நுந்தை', 'மைந்தர்' எனச் சுட்டிக்கூறியதைக்கொண்டு இவர்கள் அவனுக்குப் புதல்வரேயாகவேண்டும் எனச் சிலர் வாதிக்கவரலாம். ஆனால், இவ்வாராய்ச்சியில் எவ்விதமுடிவையும் இச்சொற்களைக்கொண்டு துணிதற்கில்லை. தந்தை, நுந்தை, எந்தை என்பன, முன்னோன், உன்தலைவன், என்னிறைவன் என்ற பொதுப்பொருளில் மேம்பாட்டுச் சொற்களாயும், 'மைந்தர்' என்பது ஆண்மக்கள் ஆண்சிறார் என்று குறிக்கும் ஒரு பாராட்டுப்பொதுச்சொல்லாயும் சான்றோர்பாட்டுக்களிற் பெருவழக்காய்வருகின்றன. இவை பிதா புதல்வர் என்ற முறையை மட்டும் யாண்டும் சுட்டிநிற்கும் நியதியுடையனவல்ல. 'எந்தை வாழி ஆதனுங்க' என்று வேங்கடத்துவேள் ஒருவனைப் புலவர் ஆத்திரையனாரும், 'அஃதை தந்தை அண்ணல்யானை அடுபோர்ச்சோழர்' எனப் பிறரும் பாடியதும் இவைபோல பிறவும் கொண்டு, நுந்தைச்சொல், உன் இறைவன், உன் முன்னவன் என்ற பொருளில் அமையுமெனத் தெளிகின்றோம். 'மாந்தர் மைந்தர் மக்களாண் பொதுப்பெயர்' எனும் திவாகரச்சூத்திரத்தால், மைந்தர்—ஆண்மக்களின் பொதுப்பெயரென்று அறிகின்றோம். ஆகவே, நுந்தை மைந்தர் என்ற சொற்களைவைத்துச் செங்குட்டுவனும் அவன்தம்பி இளங்கோவும் நெடுஞ்சேரலாதற்கு நேரே பெற்ற புதல்வராவரென் வரையறுத்து முறைகொள்ள இயலாது. மருமான்மாராய மைந்தருக்கு அவர்தம் குலமுதல்வனான அம்மான்கோவை நுந்தை என்று சுட்டுவது தவறில்லை; தகவுடையதேயாகும். பிதா புதல்வர் என்று தெளிவாக விதந்துசுட்டும் வேறு பிரயோகம் ஒன்றும் சேரரைப்பற்றிய பழம்பாட்டுக்களில் யாண்டும் இன்மையால் ஈண்டும் அம்முறை இச்சொற்களால்மட்டும் அமைத்துக்கோடற்கு அவசியமில்லை. ஆகவே, இதுவரை செய்த இவ்வாராய்ச்சியாற் சேரரை மக்கட்டாயமுடையராகத் தெளிவிக்கும் சான்றுகளொன்றும் கிடையாமையோடு, அவர்மரபினர் மருமக்கட்டாயத்தினரேயாவரென்று ஒருவாறு துணியப் போதிய ஆதாரமும் கண்டேமாவேம்.

ரு. பிற சான்றுகள்.

இதுவரையில் பதிகத்தொடர்களின் சொல்லமைப்பையும் ஆற்றலையும் கொண்டு அவற்றைத் தனித்தனியே ஆய்ந்துவந்தோம். இனி இவ்வாராய்ச்சிக்குப் பொருந்தி நின்றுதவும் சிலசெய்திகளையும் துணைக்கொள்கைகள் சிலவற்றையும் இங்கு விசாரிப்போம்.

(1) பதிற்றுப்பத்துப்பாட்டுக்களில், சேரலாதன் களங்காய்க் கண்ணிநார்முடிச்சேரல், குட்டுவன், செல்வக்கடுங்கோவாழியாதன், இரும்பொறை, இளஞ்சேரவிரும்பொறை என்ற பாட்டுடைச் சேரவேந்தர்பெயர்கள் குறிக்கப்படுகின்றன. 'நன்னுதல்கணவ', 'நல்லோள் கணவ', 'புரையோள்கணவ', 'ஒண்டொடிகணவ', 'நின் பெரியலரிவை', 'நின் கற்பின் மாணிழைபரிவை','வாணுதலரிவையொடுகாண்வர' என்று அவரவர் மனைவிமார்கற்புறுகாதற்சிறப்பாற் சுட்டியும் அவ்வேந்தரைப் புலவர் பாராட்டிப்பாடுகின்றனர். எனினும் பதிகத்திற் குறிக்கப்பெற்ற வெளியன் வேண்மாள் நல்லினி, பதுமன்தேவி, சோழன்மகள் நற்சோணை, வேண்மாள் – அந்துவஞ்செள்ளை முதலிய பெண்டிர்யாரும் யாண்டும் எச்சேரருக்கும் மனைவியாராகச் சுட்டப்பெறுமை ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. இப்பெண்மணிகள் கோச்சேரருக்குரிய பெருந்தேவிமாராயின், அச்சேரரைப்பாடும் புலவர் அவர்பெண்டிரைச்சுட்டிப் பாராட்டும் பல இடங்களில் யாண்டேனும் இப்பெருமாட்டிகள் யார்பேரையாவது ஒரு புலவரேனும் சுட்டாமல் எல்லாரையுமே எல்லாரும் மறந்துவிட்டுப் பிற்குறிப்பாகப் பதிகப்பாட்டுக்களில்மட்டும் இவரை விதந்துகூறுவானேன். உண்மையில் இப்பெண்மைப்பெருந்தகையார் கோமன்னர் மனைவிமாராயின் பாட்டுடைத்தலைவரின்பெண்டிரைச்சுட்டி 'இன்னவள் கணவ' என்று விதந்து பாராட்டுமிடங்களிலேனும் பாடும் புலவர் இவர்களை விசதமாகச் சுட்டாமல்விட்டிராரன்றோ? இப்பெண்டிர்யாரும் மூலப்பாட்டுக்களில் யாண்டும் கோச்சேரர்யாருக்கும் மனைவியாகக் குறிக்கப்படாமையாலேயே, இவரைச் சேரமன்னவருக்கு மனைவியாய்க் கருதுவது தவறு என்று தெளியலாகும். சேரருக்கு இவர்தாயரும் சோதரிமாரும் ஆவதன்றி மனைவிமாராகார் என்பதை முன் பதிகப்பாக்களின் ஆராய்ச்சியால் ஒருவாறு துணிந்துகொண்டோம். அத்துணிவை, மூலப்பாட்டுக்களில் இவர்பெயர் துலங்காமல் பாட்டுடைக் கோச்சேரரின் கற்புடைமனைவிமார்பிறரை அப்புலவர் பாராட்டிப்போவது இன்னும் அதிகம் வலியுறுத்துவதாகும்.

மருமக்கட்டாயமுடைய சேரர்குடியில் மனைவிமார்க்குப் பெரும் பதவி யொன்றுமில்லை. அம்மனைவியரின்வயிற்றுமக்களும் சேரர்குடி தாங்கும்பெற்றி பெறார், வேந்தர்க்குத் தேவியாவதல்லால் மனைவியர்க்குக் கோக்குடியில் வேறுவிதவுரிமை இல்லை. அரசியராம் பதவியொடு

குடித்தலைப மகப்பேறுதரும் பெருமை கோச்சேரர் சோதரிமார், அவர் வயிற்று மருகியர்கள்: இவர்கட்கே உரியதாகும். அதனுற்றான் சேரரைப்பாடும் புலவர் தம் மூலப்பாட்டுக்களில் அவர்மனைவியர்பெயர் விளக்கமுறத் துலக்காமற் பாடிப்போவார். கோவேந்தர் தாய்மாரைச் சுட்டுங்கால் அத்தாயர் கோக்குடியிற் பெண்வழியில் அரசியராய்ப் பதவி புள்ளாராதலாலே பதிகப்பாட்டுக்களில் அவர்பெயர்கள் உறவுமுறை பதவியோடு பெருமைபெல்லாம் விளக்கமுறப் பேசப்பெறுகின்றன.

மருமக்கட்டாயமுடைய பெருங்குடிப்பெண்டிர் ஒத்த தகவுடைய பிறிதுகுடிப்பெரியாரை மணந்து வாழ்வர். அப்பெண்டிர்பெறும் மக்கள் தாய்க்குடியில் மாமன்மார்க்குப் பிறங்கடைகளாகிநிற்பர். தந்தையர் குடியில் அவர்க்குத் தொடர்புரிமை யாதும் இல்லை. கோச்சேரர்குடிப் பெண்டிர், பெரும்பாலும் அக்கோக்குடியின் மகள்கொள்ளற்குரிய தகவுடைய குறுமன்னரான வேண்மாரைத் தாம் மணப்பர். சிறுபாலாய்ப் பிறகுலத்து முடிமன்னர்தமையும் அவர் வேட்டல்கூடும். யாரைமணந் தாலும், இப்பெண்கள்பெறும் ஆண்மக்கள் எல்லாரும் சேரருக்கு மருக ராய் அவர்நாட்டில் வழிமுறையில் அரசுரிமைக்கு அருகராவர். மாதுலச்சேரரோடு மருகச்சேரரைமட்டும் சுட்டி, அவர் தந்தையரைத் துலக்காவிட்டால், அவர்தாயரை வரைவில்மகளிராகக் கருதநேருமாகை யால் அவ்விழிதகவை அற விலக்கி, மக்கட்டாயமுடைய தமிழகம் மதிக்க மணந்து சிறந்த கற்புடைத் தாய்க்குடிப்பெருமையுடையர் பாட்டுடைத்தலைவரென விளக்கும்பெற்றி வேண்டப்படுகிறது. அதனாலே அக் கோச்சேரர்குலம்விளக்கும் பதிகங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொருகோச்சேரன் தாயையும் அவன் தந்தையொடுவிளக்கி, அவ்விரு வர்பெற்றமகன் இனையன் எனத் துலக்கி, இன்ன பெருங்கோச்சேரற்கு இவன் மருமான் எனக் குறித்து, விவரமெல்லாம் விளக்கமுற விரிக்கின் றது. ஒவ்வொருபதிகமும், பாட்டுடைத்தலைவனின் இருமுதுகுரவரை யும் விதந்து கூறி அதன்பின் அவனை அவரீன்றமகனென ஒருபடியே தெரியில்லமுறையிற் குறித்துப்போகின்றது. அன்றியும், அவன் முன் தோன்றலான கோச்சேரனை முதலிற்கூறி, பின் பெற்றோர்பெயர்கூறி, அச்சேரனுக்கு அப்பெற்றோர் ஈன்ற மகன் எனப் பதிகந்தோறும் தவறு மற் கூறிப்போவதால், அப்பாட்டுடைத்தலைவன் கோச்சேரனுக்கு வழித் தோன்றலான மருகன் என்பதும் குறிப்புவகையால் துலக்கப்படுகிறது,

(II) இனி இப்பதிகங்கள்கூறும் அரசர்வரிசையைச் சிறிது ஆராய்வோம். சேரசிம்மாதனத்தில் உதியஞ்சேரலுக்குப்பின் இமைய வரம்பனும், அவனுக்குப்பிறகு அவன்தம்பி பல்யானைச்செல்கெழு குட்டுவனும் முறையே ஏறினரெனவும், இவருட் குட்டுவன் ஆண்டு முடிந்தபின்னரே இவரிருவருக்கும் தொடர்புடைய பதுமன்தேவிமக்க ளிருவரான நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் அவர் களுக்கு இடையே சோழன் மணக்கிள்ளிதேவிமகன் செங்குட்டுவனும் முறையே ஏறி நாடாண்டனரெனவும் தெரிகிறது. மற்றொருகிளைச்சேரர் வழிமுறையில் அந்துவன்சேரல்முதல் இளஞ்சேரலிரும்பொறை யீறாக நான்கரசர் வரன்முறையாய் ஆட்சிபுரிந்தனரெனவும் விளங்கு கிறது. இவற்றைக்கொண்டு, இமையவரம்பனுக்குப் பதுமன்மகளும் சோழன்மகளும் மனைவியராய் மக்கள்மூவரைப் பெற்றுக்கொடுத்தன ரெனவும், அம்மக்கள் தம் தந்தை சிறிபதந்தை: இருவரும் ஆண்ட பிறகு முறையே தாம் முடிபுனைந்து தனித்தனியே எல்லாரும் சேர நாட்டை ஆண்டனரெனவும், அதுவேபோல அந்துவஞ்சேரலுக்குக் கடுங்கோவும், அவனுக்குப் பெருஞ்சேரலிரும்பொறையும், அவனுக்கு இளஞ்சேரலிரும்பொறையும் வழிமுறையே மகன்மகனுய்க் கிளைச்சேரர் சிறுநாட்டை ஆண்டுவந்தனரெனவும் ஒருசிலர் கருதுகின்றனர்.

ஆனல் ஆழ்ந்து சூழ்ந்து நோக்குங்கால் உண்மை வேறாகத் தோன்றுகிறது. இமையவரம்பனும் அவன்தம்பியும் வேள்வெளிய னுக்கு மக்கள். இவர் தம் மாமன் உதியஞ்சேரலுக்குமருகராய் அவ னுக்குப்பின் சேரநாட்டுரிமைபெற்று, ஒருவர்பின் ஒருவராய் ஆண்டனர். அவருக்குச் சோதரிமுறையினரான அவர்கோக்குடிப்பிறந்தபெண்டிருள் ஒருத்தி வேள்பதுமனையும் மற்றொருத்தி சோழனையுமாக மணந்து மக்களைப்பெற்றனர். அம்மக்கள் தங் தாயர்குடிச்சேரமன்னருக்கு வழி முறையில் மருகராகையால், மாமன்மாரிருவரும் தத்தம் முறையில் ஆண்டுமுடிந்தபின்னர் மருகருரிமையில் வரிசைமுறையாய்த் தாமும் சேரசிங்காதனம் ஏறுகின்றனர். பதுமன்தேவி ஒருத்தியே சேரர்பெருங் குடியில் இமையவரம்பனுக்குச் சகோதரியாயும் கிளைச்சேரர்குடியிற் கடுங்கோவுக்குச் சோதரிமுறையுடையளாயும்நின்று தான்பெற்ற மக்க ளுள் ஒருவனைத் தன்குடியில் மருகனில்லாத கடுங்கோவுக்கு மருகனுப் அவன் கிளைக்குடிதழைபக் கொடுத்துதவியிருக்கலாம். அல்லது வேள்

பதுமனுக்குக் கோக்குடி நெடுஞ்சேரலாதன்சோதரி ஒருமனைவியும், இளைச்சேரர்குடிக் கடுங்கோவின்சோதரி ஒருமனைவியுமாயிருந்து அவரவர்தாய்க்குடியைத் தாங்க இவ்விருமனைவிமாரும் பதுமனுக்கு மக்களைப்பெற்றுமிருக்கலாம். எப்படியாயினும், இம்மக்கள் ஒவ்வொருவரையும் பதுமன்தேவிமக்கள் எனச் சுட்டுவது தவறாகாது. இவ்விரு குடியிலும் இவ்வாறு மாமன்மார்க்கு மருகர் வழித்தோன்றல்களாய் நின்று வரன்முறையே நாடாண்டனர். இதுவே இப்பதிகத்தொடர்கள் தெரிவிக்கும் செய்தியெனத் துணிபக்கிடக்கிறது. இத்துணிவை வலியுறுத்தி இதற்கு மாறான மக்கட்டாயக்கொள்கையை நலிவிக்கும் நியாயங்கள் சிலவற்றை இங்கு நிதானிப்போம்.

மக்கட்டாயமுடைய கோக்குடியில், மயின்முறையாய் முதல்மகனின் முதல்மகனே வழிமுறையே அரசுபெறற்குரிமைபூண்பான். கோலோச்சுங் கோவேந்தற்கு ஆண்மக்கள் பிறந்திருக்க, அவரைவிலக்கி வேந்தனுடன்பிறந்தவர்கள் நாடாளுமுரிமை கொள்ளார். மருமக்கட்டாயக்குடியாமேல், உடன்பிறந்தாரனைவருமே வரிசைமுறையில் ஆண்டு முடிந்தபிறகுதான் அடுத்த கீழ்ப்படியிற் சோதரிமார்மக்கள்-அநந்தரவராகிய மருகர்கள்-ஆட்சிபெறுவர்.

இம்முறையிற் பதிற்றுப்பத்திற் பாடப்பெற்றுள்ள சேரபரம்பரையைப் பரிசோதித்துப் பார்ப்போம். சேரரை மக்கட்டாயமுடையராய்க் கருதுபவர் எண்ணுகிறபடி 2ம் பதிகத்தலைவனான இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு, பதுமன்மகள், மணக்கிள்ளிமகள் எனும் இருமனைவியரால், களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் என மூவர்மக்கள் உளர். இருந்தும் இவர்களை விலக்கி இவர்தம் சிறியதந்தையான பல்யானைச்செல்கெழுகுட்டுவன் முடிசூடி 25 ஆண்டு அரசுவீற்றிருக்கின்றான். அவனுக்குப் பிறகுதான் அவன் தமையன்மக்களான இம்மூவரும் நாடாட்சிபெறுகின்றனர். இது மக்கட்டாய அறமுறையில் நிகழொணாது.

சேரர் மருமக்கட்டாயமுடையராகில், பதிற்றுப்பத்தில் நாம் காணும் முறைதான் அறமுறையாகும். இமையவரம்பனுக்குப்பின் அவன் தம்பியே தாயக்கிரமவுரிமையில் அரசனாகவேண்டும். அவ்விருவர்களுக்கும் பிறகே அவர்களின் மருகர்கள் தங்கள் வயதுக்கிரமவரிசைப்படி

ஒவ்வொருவராய் முடிபுனைந்து நாடாள்வர். மேலே நாம் கண்டபடி களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்: இவர்களின் தாய் சேரர்கோக்குடிப்பிறப்புடையவள், பதுமனுக்குமனைவி. ஆவிக்கோமான்பதுமன் எனும் வேளுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனால் இவள் சேரர்கோக்குடிக்கு இருமக்களை ஈன்றுதவினள். அதுவேபோல் நற்சோணை என்பாளும் சேரர்குடிப்பிறந்து சோழனை மணந்து வாழ்ந்தவளாகும். அவளீன்றமக்கள் செங்குட்டுவனும் இளங்கோவும் ஆவர். இளங்கோ துறவுபூண்டு அடிகளாகவே அத் தாய்வழியிற் கோலுரிமைக்குடையவன் குட்டுவன்மட்டுமேயாகிநிற்பன். இவர்கள் தாய் நற்சோணையும், வேள்பதுமனின்மனைவியும் சேரர்குடியில் மணந்து புகுந்த பிறகுடிப்பெண்டிரில்லை, அக்குடியிற்பிறந்து சிறந்த பேராசிமாராவர். அவர்கள்வயிற்றுதித்தமக்களான மூவரும் இமையவரம்பனுக்கும் அவன்தம்பி குட்டுவனுக்கும் பிறங்கடையான மருகராவர். ஆகவே தங்கள் மாமன்மாரான அவ்விருவரும் ஆண்டுமுடிந்தபிறகு இம் மருகர்மூவரும் வழிமுறையில் தம் மரபுநியதிப்படி ஆட்சிபெறுகின்றனர். இது, அறமும் அடிப்பட்ட குடிவழக்குமாய்ப் பொருத்தமும் சிறப்பும் பெற்று அமைகின்றது. இவர்களுக்குமுன் இமையவரம்பனுக்குப் பின் இவர்தம் இளையமாமனை செல்கெழுகுட்டுவன் நாடாளுவதில் வரிசைமுறைப்பிறழ்ச்சி யில்லை. இவர் தம் ஆட்சிமுறையில் இவர்குடித் தாயமுறையறமே பேணி ஓம்பப்படுகின்றது.

மேலும், இம்மூவருக்கும் தாம் பெற்ற தநயர் இல்லையென்று யாண்டும் துலக்கப்படவில்லை. இவருட் செங்குட்டுவனுக்கு அவன்பெற்ற மகன் இருந்ததாக 5-ம் பதிகம் விதந்தும் கூறுகிறது. அவ்வாறு தநயர் உளராயின் மக்கட்டாயமுறைப்படி தந்தைக்குப்பிறகு உடனே உரிய தநயரே முடிசூடவேண்டுவதன்றி இவ்வாறு சோதரர்மூவரும் தம்முள் வரிசைமுறையில் ஒவ்வொருவராய் ஆட்சிபெறுவது அவசியமும் அறமும் இல்லை. தநயரைவிலக்கி இம்மூவரும் முறையே ஆண்டதும், இவர்களை விலக்கி இவர்களுக்குமுன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆண்டதும் இவர்குடியில் மருமக்கட்டாயம் உண்மையையும் அம்முறையில் இவர்களுக்கு உள்ள தாய உரிமையையும் நன்கு வலியுறுத்தும்.

இன்னும், மக்கட்டாயமுறையிற் கடைசியில் ஆண்ட அரசனின் அடுத்த பிறங்கடை (வாரிசு) க்குத்தான் அடுத்த பட்டம். ஒருதாய் வயிற்றுமக்கள் மாற்றாந்தாய்வயிற்றுமக்களைவிட நெருங்கிய தொடர்புடையர்; அதனால் சிறந்த உரிமையும் அடைகின்றனர். அறநூல்விதியும் ஆட்சியும் நமது நாட்டில் ஒருதந்தைமக்கள்பலருள், சகோதரால்லாரைவிலக்கி ஒருவயிற்றுதித்தாரையே அவர்தமக்குத் தம்முட் சிறந்த பிறங்கடைகளாக்கிநிற்கும். எனவே, களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரலுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் சகோதரன்; செங்குட்டுவன் மாற்றாந்தாய்மகன். இவர்களெல்லார்க்கும் தந்தை இமையவரம்பனுயின், அவனுக்குப்பின் அவன்மக்கள் மூவருள் மூத்தவனே சிறந்தபிறப்புரிமையுடன் பட்டமெய்துவன். அவனுக்குப்பின் அம்மூத்தமகனுடைய வாரிசுக்குப் பட்டமிறங்குவதல்லது அவ்வாரிசுகளை விலக்கி முந்திய தந்தையின் வாரிசுகளுக்குப் போவது முறையில்லை. செங்குட்டுவன் மூத்தவனுயிருந்தால் முதலில் அவனேமுடிபுனைந்திருப்பான். அவனுக்குப்பின் அவன்தநயரும் ஒருவயிற்றுத்தம்பியரும் ஆட்சிபெறுவர். இவர்க்குமுன்னே அவன் மாற்றாந்தாய்மக்களுக்கு உரிமையில்லை. ஆனால், செங்குட்டுவனுக்குமுன் நார்முடிச்சேரல் ஆண்டிருப்பதாய் அறிகின்றோம். அதனால் அவனே வயதில் மூத்தவனுகப் பட்டமெய்தினான் என்று தெரிகிறது. அவனுக்குப்பின் அவன்தநயரும் தநயரில்லையானல் அவனுக்கு ஒருவயிற்றுத் தம்பியான ஆடுகோட்பாட்டுச்சேரலாதனுமே அவன் அரசுபெறுதற்குச் சிறப்புரிமையுடையராவர். இவர்களை விட்டு இடையே செங்குட்டுவன் ஆட்சிபெறுதற்கு அவசியமும் நியாயமும் இல்லை.

ஆனல் மருமக்கட்டாயக்குடியில் இவர்கள் கோச்சேரருக்கு மருகராவர், ஆகவே வயதுக்கிரமப்படி இம்மூவரும் ஆட்சிபெற்றுத்தீர வேண்டும். மருகருள் ஒருவயிற்றுதித்ததால்மட்டும் யாருக்கும் எவ்விதச் சிறப்புரிமையும் ஏற்படாது, வயதுமுறைவரிசையில்மட்டுமே அவரவர் ஆட்சியுரிமை வரையறுக்கப்படும். ஆளும் அரசருக்கு மக்கள் இருந்தாலும் அம்மக்களுக்கு உரிமையில்லையாகவே ஒருவர்பின்னொருவராய்ச் சோதரரும் சோதரருக்குப்பின் அவர்தம் மருகருமே ஆட்சிபெறுவர். பதிற்றுப்பத்துப்பதிகங்களால் இவர்மூவரும் முறையே சேரநாட்டை ஆண்டதாயும், இவருட் சகோதரரிருவர்க்கிடையே ஒருவயிற்றுதியாத

செங்குட்டுவன் ஆட்சிபெற்றதாயும் அறிகின்றோம். இவையெல்லாம் மருமக்கட்டாயத்தொடுபொருந்துவனவன்றி, மக்கட்டாயமுறைக்கு ஒவ்வா. இவற்றாலும் சேர்குடியில் மக்கட்டாயம் வழங்கவில்லை என்பது உறுதிபெறுகிறது.

(III) இதை வலியுறுத்தும்செய்தி இன்னுமொன்று உளது. பதிற்றுப்பத்திலும் மற்றும் பண்டைச்சங்கநூல்கள் பலவற்றிலும் சேரரைக்குறிக்கும்பாட்டுக்கள் பல. அவற்றுள் ஒன்றிலேனும் ஒரு சேரனையாவது அவன்தந்தைக்குமகன் என்று சுட்டுங்குறிப்பே கிடையாது. அதற்குமாறாக முன்னரசரின் தொடர்புகுறிக்குமிடத்திலெல்லாம், பாட்டுடைச்சேரனை அம்முன்னோனின் மருகன் எனவே எல்லாப் பழம்புலவரும் யாண்டும் சுட்டிப்போகப் பார்க்கின்றோம். இது மிகவும் சிந்திக்கத்தக்கது.

மருகன் என்பது வழித்தோன்றல் என்ற பொருளுடையசொல்லாகையாலும், அடுத்ததந்தையைச்சுட்டாமற் புகழ்சிறந்தமூதாதையரையே சுட்டித் தொடர்புகாட்டுவது புலவர்முறையாகையாலும், அம்முறையிற் பாட்டுடைத்தலைவரை அம்முன்னோருக்கு மருகரெனவே சுட்டிப்பாடுகின்றனரெனச் சிலர் சமாதானம் காட்டவரலாம். எனில், சேரகுலத்தில் என்றும் புகழ்படைத்த ஒரு சேரலற்குப் புகழ்படைத்த பெருமக்கள் ஒருவருமே பிறக்கவில்லையென்றாவது, அடுத்துப் பெரும்புகழ்கொண்ட இருதலைமுறைச் சேரவேந்தரைப் பாடப் புலவரில்லையென்றாவது கொள்ளுவது அசம்பாவிதம். பதிற்றுப்பத்துப்பதிகப் பாட்டுக்களை மக்கட்டாயமுறையிற் பொருள்கொள்ளுவோர், இமையவரம்பனுக்குப்பின் அவனையொத்துப் பாடப்பெறும் புகழ்படைத்த மூவர்மக்கள் இருந்தனரென்றும், அந்துவன்சேரல் முதல் இளஞ்சேரலிரும்பொறைவரை நாலுதலைமுறையாக ஒவ்வொருசேரனுக்கும் பாடப்பெறுஞ் சிறப்புடைய பெருமகனே பிறந்து புகழ்சிறந்துளனென்றும் கூறுகின்றனரே. இம்மக்கள்பலருள் யாரையேனும் அவனைப்பாடிய புலவர் அவனை அவன்பெருந்தந்தைக்கு மகனெனச்சுட்டிப் பாடாததற்குக் காரணம் என்ன? ஒவ்வொருபதிகத்தலைவனுடைய மனைவியின் தந்தையைக்கூடப் புலவர் தவறாமற் சுட்டிச் சிறப்பிப்பதாக இப்பதிகத் தொடர்களுக்குப் பொருள்கொள்ளுகிறவர்கள், அச்சேரருக்குமுன்

பெரும்புகழ்படைத்துப் பல புலவராற் பாடப்பெற்ற அவர்தம்தந்தையரைமட்டும் எல்லாப்புலவரும் ஒருபடியாக மறைத்தொதுக்குவானேன்? மக்களைப்பாடும் புலவரெல்லாரும், அம்மக்களினும் புகழ்சிறந்த அவர் தம்தந்தையரை அற மறந்து ஒதுக்கிவிட்டு, பெயர்சுட்டும்பெற்றிபெறாப் பெண்டிரையும், அப்பெண்டிர்பிதாக்களையும் தம் பாட்டுக்களில் மறவாமற் பாராட்டுவானேன்? போகட்டும். ஒருதலைபாகப் பாடும் சேரரின் முன்னோரை மதியாமல்விட்டொழித்து, அச்சேரர்காதற்பெண்டிரோடு அவர்தந்தையரைமட்டுமே பழம்புலவரெல்லாரும் பாராட்டினர் என்றுவது கொள்ளக்கிடந்தாலும் ஒருவாறு அமைதிபெறலாம். உண்மையிற் புலவர்பலர் தம் பாட்டுடைத்தலைவரின்முன்னோரை விட்டபாடில்லை. அன்ன பெருமுன்னோரைச் சுட்டி அவர்மருகரெனத் தலைவர்தமை விதந்துபாராட்டிப்போக நாம் பார்க்கின்றோம். பதிற்றுப்பத்திலேயே அத்தகைய குறிப்புக்கள் பல வருகின்றன. இதனை ஊன்றிச் சிந்திக்கும் போது மக்கட்டாயமுறை இக் கோச்சேரர்குடியில் இல்லாமையே இவ்வாறு சேரரெல்லாம் மருகரெனவே பாடப்பெறுதற்குக் காரணமென்று தெரிகிறது.. இளஞ்சேரலிரும்பொறையைப் பெருஞ்சேரலிரும்பொறையின்மகனென்னது, 'விறல்மாந்தரன் விறன்மருகன்' என்று பெருங்குன்றூர்கிழார் பாடத் தக்ககாரணம் இம்மருமக்கட்டாயமன்றிப் பிறிது காணல் அரிது.

ஊன்றிச்சிந்தித்தால் மருகன் என்னும் சொல்லுக்கு வழித்தோன்றல் என்னும்பொருளே இம் மருமக்கட்டாயவழக்கால் வந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. மருகன் எனும் சொல் நேரே சோதரிமகனையும், மகள்மணவாளனையுமே குறிப்பது மரபு. அந் நேர்பொருளில் வழங்குவதோடமையாமல், அச்சொல் சில புலவர்செய்யுள்களில் மக்கட்டாயக்குடிகளில் வழித்தோன்றலாவாரைச் சுட்டவும் வருகின்றது. மக்கட்டாயநாடுகளில் இம் மருகர் மாமன்மார்க்கு என்றும் வழித்தோன்றலாகமாட்டார். இவர்க்குரிய பெயர்ச்சொல் இவர்க்குரிமையற்ற வழித்தோன்றலாம்முறையில்வருவாரைக் குறிக்கப்பெறுவானேன்? மக்கட்டாயமுறையில் அப்பொருளாக்கம்பெறும்பெற்றி அச்சொல் அடையுமாற்றல் இல்லை. மருமக்கட்டாயவழக்கம், தமிழகத்தில் உளதாயின், அம்முறையில் வழித்தோன்றலாவார் மருகராயோகையால், நாளடைவில் மருகர் எனும் சொல் தன் நேர்பொருளைமட்டுமன்றி, வழித்தோன்றல்

எனும் சார்புப்பொருளேயும் வழக்காற்ருற் பெறுவது இயல்பாகும். பிறகு இருதாயக்குடிகளிலும் தாயமுறையைக்குறியாமலே பிறங்கடை (வாரிசு) ஆவார் எவரையும் வழித்தோன்றல் எனச் சுட்டும் பொதுச் சொல்லாகி வழங்கப்பெறும். இதுவே இச்சொல்லுக்கு இப்பொருள் கிடைத்த வரலாருகவேண்டும். என்றும் யாண்டும் மருமக்கட்டாயமறி யாத மக்கட்டாயம் மட்டுமே வழங்கும் ஒருநாட்டில் மருகர் என்றுமே வழித்தோன்றலாகாராகையால், அவர்பெயர் அப்பொருளெய்த நியதி யில்லை, வழியுமில்லை. ஆகவே, தமிழில் இப்பொருளில் இச்சொல் வழங்கி வருவதாலும், தமிழகத்திற் சேரநாடல்லாத பிறிதுபுலமெல்லாம் மக் கட்டாயமே தொன்றுதொட்டு நினைவெட்டும் நூல்குறிக்கும் காலமெல் லாம் கையாளப்பெறுவதாலும், இச்சொல்லுக்கு இப்பொருளாட்சி குட புலச்சேரர் குடித்தாயமுறைகொண்டே கிடைத்திருக்கவேண்டுமென்பது தெளிவுபெறுகிறது. எனவே பழம்பாட்டுக்களிற் சேரரையெல்லாம் மருகர் எனவே குறித்துப்போகும் வழக்காற்ருல் அச்சொல்லின்பிந்திய பொருள்கொண்டு அவரை மக்கட்டாயமுறையில் வழித்தோன்றல்கள் எனக் கொள்ளுவதைவிட, அவர்களின் மருமக்கட் டாயமுறையையே அது சுட்டுமெனவும், அவர் தாயமுறைவழக்குப்பற்றியே நாளடைவில் அச்சொல் வழித்தோன்றல் எனும் பொதுப்பொருள்பெற்று மக்கட்டாய முறையில் வழித்தோன்றலாவாரையும் குறிக்கலாயிற்றெனவும் கொள் ளுவதே பொருத்தமாகும்.

இனி, இங்கு நாம் பொதுவாக விசாரித்தறியவேண்டியசெய்தி பிறிதொன்று உண்டு. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் பாட்டுடைத் தலைவனைப் பதிகத்திற்குறித்த வேறு சேரவேந்தனுக்கு மேலேகூறியபடி 'மருகன்' என்னுமல் வாளா மகனென்றே கூறிவைத்திருக்கின்ருர். ஆகவே இங்கு 'மகன்' எனும் சொற்பொருளை நாம் சிறிது விசாரிப்பது பொருத்தமாகும். பதிற்றுப்பத்து நூலிலும் மற்றச் சங்கச்செய்யுட்க ளிலும் நிரந்தரமாகப் புலவரெல்லாம் தாம் பாடும் சேரரை அவர்தம் முன்னேருக்கு மருகர் என்றே குறித்துப்போவதற்குமாருக, இப் பதிகப்பாட்டுக்களிலெல்லாம் ஒருபடியாக ஒவ்வொருபாட்டுடைச்சேரனை யும் மற்ருெரு பெயர்குறித்த சேரமன்னனுக்கு 'மருகன்' என்னுது வாளா 'மகன்' எனவே கூறிவைத்திருப்பது சிந்திக்கத்தக்கது. ஒரு சேரனுக்கு மற்ருெருவன் மகன் என்றுமட்டும் கூறப்பட்டாலுங்கூட,

அதுகொண்டு பின்னவன் முன்னவனுக்கு அவன்பெற்றபுதல்வன் என்று ஒருதலையாகத் துணிய இயலாது. அப்படியிருக்க, இங்குப் பதிகங்களிலெல்லாம் வாளா இருசேரரைமட்டும் சுட்டி, அவருள் ஒருவனை மற்றவனுக்கு மகன் எனப் பேசப்படவும் இல்லை. ஒவ்வொருபதிகத்திலும் 'மகன்' எனும் சொல், தனியே இருசேரர்பெயர்க்கிடையில் முறைப்பெயராய்நில்லாமல் இடையேபிறசொற்றொடராக்கம்பெற்றேவருகின்றது. இங்கு இதன்பொருளைச் சிறிது ஊன்றிவிசாரிப்பது அவசியமாகிறது.

'மகன்' என்ற சொல் தமிழில் (1) ஆடவன், (2) மணவாளன், (3) பெற்றபுதல்வன், (4) பெறாத வழித்தோன்றல் எனப் பலபொருளிலும் வருவதாகும். ஆகவே இச்சொல்லுக்கு ஆங்காங்கே இடம்நோக்கிப் பொருள் இன்னதென்று வகுத்துக்கொள்ளவேண்டுவது இன்றியமையாத கடமையாகும். பதிகங்களிலெல்லாம் இச்சொல் எங்கும் நிரக்க 'ஈன்ற' என்னும் அடையடுத்தேநிற்பதால் இதற்குக் கேவலம் ஆடவன் அல்லது மணமகன் என்றபொருள்கள் விலக்கப்படும். பெற்றோர்பெயர் குறித்து, இன்னார்மனைவி யீன்றமகன் என்று விதந்துகூறப்படுவதால், அப்பெற்றோருக்குப் பாட்டுடைத்தலைவன் அவர்பெற்றபுதல்வனே என்று தெளியப்படும். அதனாலேயே பதிகமுதலிற் பெயர்குறிக்கப்பெற்ற சேரனுக்கு அவன் புதல்வன் ஆகான் என்பதும் தெளியப்படும். இனி அச்சேரனுக்கும் பாட்டுடைத்தலைவனுக்கும் உள்ள தொடர்பைக் குறிக்கும் வேறு முறைச்சொற்கள் எதுவும் அங்கு இல்லாததால், அத்தொடர்பையும் இம் மகச்சொல்லே குறிப்பதாகவே கொள்ளவேண்டும். கொண்டால், அக்குறிப்பில் இச்சொல்லுக்குப் பெற்றபுதல்வனல்லாத வழித்தோன்றல் என்ற பொருளே அமைவதாகும். ஆகவே, இங்கு ஒவ்வொரு பதிகத்தலைவனையும் புலவர் பதிகப்பாட்டில் அவன் பெற்றோரிருவரையும் விதந்து சுட்டி, அவருக்கு அவன் ஈன்றமகன் என விளக்குவதோடு பதிகமுதலிற் பெயர்குறித்த மற்றொருசேரனுக்கும் அவன் வழிமுறை மகனாவான் என்றும் தெளிவிக்கின்றார் என்பது விசதமாகிறது. ஆகவே இங்குப் பதிகங்களில்வரும் 'மகன்' எனும் சொல் பதிகத்தலைவனைப் பெற்றோரின் தொடர்புகுறிக்கும்போது புதல்வன் என்ற முறைப்பொருளிலும், மற்றொருசேரமன்னனின்தொடர்புகுறிக்கும்போது 'வழித்தோன்றல்' என்ற தகவுப்பொருளிலும் ஆட்சிபெறுகின்றதென்று தெளிவாகிறது.

இதைத் தெளிவிப்பதற்காகவே ஆசிரியர் பாட்டுடைச்சேரனைப் பெற்ற இருமுதுகுரவரைக்குறிக்குஞ்சொற்றொடரை அவனைச்சுட்டும் 'மகன்'என்றசொல்லுக்கு அண்மையில்வைத்ததொடரமையாமல் அடுத்து அச்சொல்லுடன் 'ஈன்ற' என்ற அடைதொடுத்துநிறுத்தியும், அவனைப் புதல்வனுகாமல் வழித்தோன்றலாகமட்டும் பெறும் மற்றொருசேரமன்னன்பெயரைக் குவ்வுருபுகொடுத்துப் பிரித்துச் சேய்மையில் நிறுத்தியும் வைத்திருக்கும் அழகு கவனித்துப் பாராட்டத்தக்கது. இங்கு நான்கனுருபு கொடை–பொருட்டு–முறைப்பொருள்களில் வந்துள்ளது. பதிகமுதலிற்குறித்த ஒருசேரனுக்கு, அவன்மரபு தழைக்கும் பொருட்டு, அவன்குடி சிறக்க மகப்பெற்று ஈயும் உரிமையுடைய கோமாள்ஒருத்தி–விதந்துகூறப்பட்ட வேறொரு தக்ககணவனைமணந்து அவன்மனைவியாவாள், தனக்கு மகனைத் தான்பிறந்த சேரர்குடிதழைய அச்சேரனுக்கு முறைக்கு மகனைப் (வாரிசாய்) ஈன்றுகொடுத்தவனே பாட்டுடைச்சேரன் என்பது பதிகத்தொடரமைப்பால் இனிது போதருகின்றது. பதிகமுதலிற்குறிக்கும் சேரன்பெயர்க்கு நான்காம்வேற்றுமையுருபுபுணர்த்திப் பிரித்து அதைச் சேய்மையில்நிறுத்தியதனால் அப்பெயருடையானுக்குப்பின் "ஈன்றமகன்" என்றுவரும் தொடர்குறிக்கும்பாட்டுடைத்தலைவன் நேரே பெற்றமகனுகாவிட்டாலும் அச்சேரன் குடி சிறக்கும்பொருட்டு, அவனுக்கு மகன் (வாரிசு) முறையாக அவன் குடிப்பிறந்தாளொரு கோமாட்டி பெற்றுக்கொடுத்த (மகன்) வழித்தோன்றலாவான் என்று இப்பதிகத்தொடர் பொருள்படுத்தலால் இங்குப் பொருட்டு–முறைப்பொருள்களையும் கோடற்பொருளையும் முறையே குவ்வுருபு கொடுப்பதாகும். பெற்றோர்பெயர்களை அண்மையிற் குறிப்பதால், அவர்களுக்குப் பாட்டுடைத்தலைவன் நேரே யீன்றமகனுவதைப் பொருந்தக்கூறவேண்டியதன்பொருட்டும், சேய்மையிற் சுட்டிய சேரனுக்கு வழித்தோன்றலாவதைக் குறிக்கும்பொருட்டும், இரண்டுக்கும் உதவவொண்ணுத 'மருகன்' என்பதை விலக்கி, ஒருங்கே இருபொருளிலும் செவ்வனே நின்றமைவதான 'மகன்' என்றசொல்லையே இங்கு இப்பதிகங்களிற் புலவர் ஓர்ந்து உபயோகித்துள்ளார் என்பது பதிகத்தொடரமைப்பால் இனிது தெளியக்கிடக்கின்றது.

இன்னும், குடமலைத்தொடருக்குமேற்கே குடபுலத்தில்மட்டுமே இம்மருமக்கட்டாயம் நெடுவழக்காய் நின்றுவருகின்றது. அம்மலைத் தொடருக்குக் கிழக்கே தமிழகம் முழுவதும் மக்கட்டாயமே நிலைத்து நிற்கின்றது. இக் கீழ்புலத்தில் என்றும் யாண்டும் யாராலும் மருமக்கட்டாயம் ஆட்சிபெற்றதான குறிப்பே கிடையாது. இந்நிலையில் இத் தாயமுறையைப் பண்டைக்காலத்திலும் கையாண்ட சேரர் மக்கட்டாயமன்றி மற்றதனையறியாத சோழர்புனல்நாட்டின்மத்தியிலே கருவூரில் ஆண்டிருப்பரா? அல்லது மருமக்கட்டாயம்வழங்கும் குடபுலத்திற் பேராறு குடகடலிற் சங்கமிக்கும் பெருந்துறைப்பட்டினமான பழைய வஞ்சியில் வாழ்ந்திருப்பரா? என்று யோசிக்கும்போது, இச்சேரர்முதூரான வஞ்சி கருவூர்—ஆனிலையாகாது திருவஞ்சைக்களமே யாகுமென வேறுபல சான்றுகளால் துணியப்படும் முடிவு இத் தாயமுறையாராய்ச்சியாலும் வலிபெறுவதாகிறது.

இனி, இம் மருமக்கட்டாயம் தொல்லைத் தமிழ்மரபா? பழமரபாமேல் தமிழகத்திற் கேரளமொழிந்த பிற பகுதிகளிலெல்லாம் இது வழக்கிழந்ததுமட்டுமன்றிப் பழஞ்சேரருக்கு மக்கட்டாயமே மரபாமெனத் தமிழர் கருதும்படி இது மறக்கப்படக் காரணமென்ன? தமிழ்மரபன்றேல், சேரர் எக்காலத்தில் யாண்டிருந்து எப்படி இதனை மேற்கொள்ளலாயினர்? சேரரே தமிழர்தானா? அன்றி 'வடவாரியரை வணக்கியது' போலவே, 'தமிழ்ப்படையையெல்லாம் இடையறப்படுத்தி'த் தருக்கினர் என்று இவர் கீர்த்திகொள்வதால், இச்சேரர் தமிழரல்லாத அந்நியரா? என்ற பல கேள்விகளும் ஆராயத்தக்கனவாம். ஆனால் அவையெல்லாம் எடுத்துக்கொண்ட இந்த ஆராய்ச்சிக்கு அவசியமல்லாதனவாகையால், அவற்றைப் பிந்தித் தக்க சமயம் கிடைத்துழிச் சாவகாசமாக விசாரிக்க விடையேற்பேம்.

தற்போது மேல்புலத்தில் வழங்கிவரும் மருமக்கட்டாயமுறை புதிதோன்றில்லையென்பதும், தொல்லைச் சங்ககாலப் பழஞ்சேரர்குடிகளிலும் அடிப்பட்டதொன்மரபாய் ஆட்சிபெற்றுத் தொன்றுதொட்டே வழங்கிவருவதாய்த் தெரிகிறது என்பதுமே, இவ்வாராய்ச்சியால் நாம் காணக் கிடைக்கும் பொருளாகிறது.

1929-ஆ மார்ச்சுமீ 10உ (விபவ-ஆ மாசிமீ 27உ) காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார் அவர்கள் B.A., B.L.,
அக்கிராசனம்வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள், B.A., B.L.
3. ,, ராவ் ஸாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள், B.A., B.L.
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B.A., B.L., M.L.C.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1928-ஆ செப்டம்பர்மீ முதல் 1929-ஆ பிப்ரவரிமீ முடிய உள்ள சங்கம் வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. 1928–29ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

III. மதுரையிலுள்ள M. R. C. C. Bank-ல் வட்டிக்குப்போடப்பட்டு முன் டெபாஸிட்டின் காலவரையறை கடந்ததாயுள்ள சங்கத்தின் Fixed Deposit தொகை ரூ 1050-யும் மறுபடியும் ஷை பாங்கிலேயே மூன்று வருடங்கட்கு வட்டிக்குப்போட்டுவைக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. (a) தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி இரண்டாம்பதிப்பின் அச்சிட்ட பிரதிகளில் மூன்றிலொருபாகம் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ மு. இராகவையங்காரவர்களுக்குக் கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

(b) இராமேசுவரம் தேவஸ்தானம் ஸம்ஸ்கிருதபாடசாலைப்புத்தகசாலையின் உபயோகத்துக்குச் சங்கப்பிரசுரங்களில் ஒரு பிரதி இனாமாகக் கொடுக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

(c) சங்கத்தின் வருஷோத்ஸவத்தை நடத்தத்தேதிகுறிப்பிடவேணுமென்று மாட்சிமைதங்கிய அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரை,
10—3—1929

N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார்,
அக்கிராசனம் வகித்தவர்.

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௧௧௨-ம் பக்கத் தொடர்ச்சி.]

அங்குளபுலவர்தங்களைத்திருத்தியண்டருந்தொண்டரும்புகழக்
கங்கைநீராடியத்தலத்தமருங்கண்ணனைக்கண்டடிவணங்கி
பங்கயநயனப்புருடவுத்தமனைப்பனிமலர்சொரிந்தடிவணங்கிச்
சங்கமோடாங்கேசிலபகலிருந்தத்தலத்துறும்புலவரைவென்றே. (௭௩௯)

வேறு.

சீர்கொடன்றிருநாமத்தாற்சிறந்தமண்டபமொன்றாக்கி
யேருறுமெதிகணாதனிலங்குமத்தலத்தோர்முத்தி
சார்வுறவெண்ணினான்றன்றமரொடுமந்நாட்கங்குல்
நேருறுமிராக்காலத்தினினைந்துகண்வளர்ந்தகாலை. (௭௪௦)

வேறு.

திருத்திகழுந்திருமார்பன்செகநாதன்முன்புலகிற்
குருக்களுக்குங்குருக்களெனக்குலவுமறையறைதலினா
லிருக்கின்முடிவுணர்ந்தொடுங்குமெதிநாதன்கனவிடையி
லருத்தியொடுஞ்சென்றுநம்மையாசிரியனாகவென்றும். (௭௪௧)

வேறு.

எண்ணியிருப்பாராதலினாலிங்குளாரைநீதிருத்தல்
புண்ணியத்தின்கொழுந்தனாய்வேண்டாமப்பாற்போதியென
விண்ணிலோங்கும்விரிபுகழான்றொண்டக்குழாத்தைவிரைந்தெடுத்து
மண்ணிலீராறோசனைக்குத்தெற்கேவைத்தம்மான்மீண்டான். (௭௪௨)

மருவருஞ்சீர்மாமாயன்வைத்தகன்றவிடத்தாங்கே
பொருவரியவெதிராசன்பொருக்கெனக்கண்விழித்தருளித்
திருவநந்தபுரத்தமர்வார்செகநாதரெனுமிருவ
ரொருவரெனும்படிகாண்மின்றொண்டர்களேயெனவுரைத்தே. (௭௪௩)

வேறு.

தொண்டரையெழுப்பிநென்னலைப்படுத்ததோமறுதலத்தையுமிதையும்
கண்டிடுந்தொண்டிர்கனவுமொன்றுண்டுகேளுமென்றாங்கதுங்கழறித்
தண்டுழாய்மார்பன்செய்கையைநினைந்துதத்தமிற்சிந்தையில்வியந்தங்
கண்டர்சேர்சிங்ககிரியமரப்பன்கழல்பணிந்தன்பரோடெழுந்தே. (எசச)

ஆங்குளதெய்வத்திருப்பதியனைத்துமன்பினாலன்பரோடிறைஞ்சி
யோங்குவேங்கடத்திற்புனிதனையிறைஞ்சியுரைத்தவத்தொண்டைமண்டலத்திற்
பாங்குறுபுலவர்செருக்கினையடக்கிப்பழனஞ்சூழ்காஞ்சிபுக்கருளைத்
தாங்குநற்கருணைப்பேரருளாளர்தம்மையுந்தமரொடும்பணிந்தே. (எசரு)

வேறு.

ஆசிலாக்கோவலூராழ்வார்கணயினாரைத்
தேசிகனார்புகுந்திறைஞ்சித்திருவயிந்திரபுரத்தி
லீசனையுமடிபணிந்தாங்கெழிற்சோழன்மண்டலத்தில்
வாசவனுந்துதித்திறைஞ்சுங்கலிகன்றிகழல்வணங்கி. (எசசு)

சீராருந்திருக்கண்ணபுரத்திறையைச்சென்றிறைஞ்சி
நேராயமண்டலத்தினிகழுந்திருப்பதியிலொன்றுஞ்
சோராமற்புகுந்திறைஞ்சித்தொல்லமரர்தொழுதேத்த
வாராமஞ்சூழ்ந்ததிருவரங்கனைவந்தடிபணிந்தார். (எசஎ)

வேறு.

மறைகளாயிரமுமுணர்ந்தவன்வணங்கவானவர்தொழுதெழுமரங்கத்
திறைவனும்பணிந்தவெதிகணாயகனையிருகணானோக்கியாசறவோர்
குறையறவெங்குந்திரிந்துநஞ்செங்கோற்கோவுண்மைசெலுத்திமீண்டனையோ
பொறையெலாந்திரண்டோருருவெடுத்தோங்கும்புண்ணியாவென்றிறைபுகழ. ()

வேறு.

சீராருமெதிராசன்றிருமகள்கோன்றனைநோக்கி
யாராமஞ்சூழ்ந்ததிருவரங்கமெனும்படியாகப்
பாரார்சின்பதிதோறும்பணிந்துவிடைகொண்டுதுழாய்த்
தாரார்நீண்முடிமாலேயுனக்காட்செய்திடச்சமைந்து. (எசகூ)

வேறு.

வந்தேற்குண்டோகுறைகளருண்மாமாயவனேமாதவனே
செந்தேனொழுகும்பூம்பொழில்சூழ்சீராரங்கத்தாரமுதே

நொந்தேன்சரணமென்றவர்கணோய்தீர்மருந்தேநண்ணியனே
தந்தேயென்னையுனக்கென்றதலைவாசரணமெனத்தாழ்ந்தே. (எருO)

வணங்கிவாழ்த்திவலஞ்செய்துமாசிலாதவெதிநாதன்
இணங்குமடியார்புடைசூழவிறைஞ்சிமடம்புக்கப்பதியிற்
குணங்கள்மிக்கவருளாளப்பெருமாள்கூரத்தாழ்வானு
மணங்கின்பொருட்டாலிதமுரைத்தவாண்டான்முதலோரடிபரவ. (எருக)

இருந்தான்சிலநாளெதிநாதனந்நாடன்னிலிருநிலத்தின்
விருந்தாலமரருண்மாரிமிகவுஞ்சுருங்கமேனாட்டிற்
பொருந்தாவின்றசாதிகளிற்புகலுங்கட்டளைவாரியரி
லருந்தாப்பசியான்மிகவாடியரங்கநகரிற்சிலர்புக்கார். (எருஉ)

வாசவார்குழலாளொருத்திமற்றவருண்மன்னுமுற்றவத்தினாற்புவியி
லாசிலாக்கொங்கிற்பெரியபிராட்டியாரெனவுறைவதற்கமைந்தாள்
நேசமார்கணவன்றன்னொடோரகத்திலிருந்தனள்சிலபகனிகரி
லீசனார்க்கினியவெதிகனாயகனாரியற்கையைமயக்கறவுணர்வாள். (எருங)

அத்திருமனையின்மச்சின்மீதேறியன்புறுகணவனோடிருந்தாங்
குத்தமக்குணத்தாளுடையவரிடத்திலோங்குலகாளுமன்னவனும்
பத்தர்கள்குழுவும்புகுவதுமவரைப்பணிவதுந்திரிவதுமவர்தஞ்
சித்தமுமொடுங்கியாவருங்காணத்திருக்கைபிற்கூடையுமெடுத்தே. (எருச)

வேறு.

ஓங்கியமனைகடோறுமுபாதானம்பண்ணினாளு
மாங்கவையுணவதாகவாழ்வதுமனைத்துமாண்டப்
பூங்குழலானோக்கியீதோர்புதுமையிவ்வுலகையெல்லாந்
தாங்கியமன்னனாதிசரணெனவிவரைத்தாழ. (எருரு)

இருந்துறவிவனுந்தொண்டர்திருமனைதோறும்புக்காங்
கருந்துவதுபாதானத்திலாதலாலிவன்பாலொன்று
மருந்தெனக்கேட்கவேண்டுமெனமனத்தெண்ணிமாதி
யிருந்தனளகத்திலோர்நாளேகினான்பிச்சைக்கெம்மான். (எருசா)

சென்றுறுமனையுட்சேர்ந்துசீர்பெறுமுபாதானத்தை
யன்றுபெற்றெந்தைமீண்டானமர்ந்தமச்சிழிந்தவன்ன
மின்றுரிற்கேட்பதொன்றுண்டேகலிரியாவென்ன
நின்றிடைகழியிற்கையான்மறித்தன[illegible]ண்டர். (எருஎ)

அன்னைபே .னை பாய்கேட்பதேதென்னிலறைதியென்றான்
பின்னையேயனையாண்மேலோர்பெருநிலமாளுமன்னன்
நின்னைவந்திறைஞ்சநீபின்னீணிலத்தவற்கென்னீந்தாய்
மின்னையேயனையமேனிவித்தகாவிளம்பாயென்றான். (எருஅ)

ஆயிலத்திறத்தைக்கேட்டியருவினையேனையீன்ற
தாயெனத்தகையாயிந்தத்தண்புனலரங்கமன்னும்
மாயவன்றிருநாமங்கள்வரம்பிலவவற்றிலொன்றைத்
தூயவற்குரைப்பேனந்தச்சொற்பொருளினிமையாலே. (எருகூ)

என்னைமேலாகவெண்ணித்திரிவரென்றெம்மான்கூற
வன்னமென்னடையாளுன்னைவணங்குவேனதனையிப்போ
தின்னரும்புகழாயெற்குரைத்தியென்றுரைத்துத்தாழ்ந்தாண்
மன்னியவருளின்மிக்கான்மற்றவடனக்கப்போதில். (எசுo)

தொக்கவல்வினைகண்மாளச்சுருதிநாயகனாரேந்துஞ்
சக்கரஞ்சங்கநல்கித்தாழ்குழல்செவியிற்கண்ணன்
அக்கரமெட்டுமோதியன்னமேபிடித்திரொன்னத்
தக்கசீரெதிகனாதன்றன்னிடவகையிற்சார்ந்தான். (எசுக)

மாதுநல்லாளுமன்றேமணிமதிளரங்கத்தானைக்
கோதறுமிதையப்போதிற்குடிபுகவிருத்திவாழ்ந்தாள்
ஓதுமக்காலந்தன்னிலுலகுறுகரிப்புநீங்கிச்
சீதவான்மழையாலெல்லாத்திசைகளுஞ்செழித்ததன்றே. (எசுஉ)

வேறு.

அந்நாளிலெதிராசன்றிருவடியிலாயிழையாள்
என்னாவிக்குறுதுணையேயெனவணங்கியெழுந்திருந்து
முன்னாங்களிருந்ததலஞ்செழித்ததென்றார்முதியோனே
யிந்நாளெங்கணவனொடுமேகவிடையீகென்றாள், (எசுங)

வேறு,

விடையருளெனக்கென்றேத்துமெல்லியலாளைநோக்கி
யுடையவரணங்கேயென்னால்வேண்டுவதுரைத்தியென்றார்
தடையறப்பின்னுந்தாழ்ந்தத்தாழ்குழல்செப்புமெந்தா
யுடைவுறுமுதலொன்றீந்தாயடியனேற்காவிநாதா. (எசுச)

இன்னமொன்றருளிச்செய்தென்னின்னுயிர்க்குறுதியாக
மன்னநின்பாதப்போதின்மரவடியிரண்டுநல்கி
யுன்னரும்புகழின்மிக்காய்விடையருளென்றானும்பன்
அன்னமென்னடையாடன்பாற்றுயத்தையுமருளிச்செய்தே. (௭௬௫)

வேறு.

சீராருமரவடியைத்திருவனையாள்வசத்தளித்தா
ஞாதகாதலளாயேற்றுமுடிமிசையமைத்துப்
பாராரப்பணிந்தேத்திப்பனிமலர்க்கண்ணீர்ததும்பக்
காரார்பூங்குழலியுந்தன்கணவனொடுமேகினாள். (௭௬௬)

வேறு.

அந்தநாளிற்றிருவரங்கத்தமுதனாரென்றருணம
மிந்தநிலத்திலுடையவராயிலங்குமரங்கன்றானத்தின்
முந்தும்வரிசைக்கதிபதியாய்முந்நீர்ஞாலத்துறுசெல்வம்
வந்துபணியவீற்றிருக்கும்வாழ்க்கைநெறியில்வளர்பவராய். (௭௬௭)

ஒருவருளரங்கவர்மடவாருருவிற்பதிந்தசிந்தையராய்ப்
பருவங்கண்டவிடந்தோறும்பழியுகாகும்பாராதே
யுருவங்கண்ணுக்கழகாகவுடையார்மன்னுங்கடைதோறு
மருவியிரவும்பகலுமுறமயங்கித்தம்மைமறந்தவமே. (௭௬௮)

திரிவாரதனையுடையவர்க்குச்சிலர்கண்மொழியவுடையவரும்
பரிவானோக்கியவர்க்கிரங்கியருளிப்பகவற்சம்பந்தந்
துரியாதீதத்துறுமுண்மைதுலங்கவளித்தாங்குடனாளும்
பிரியாஞானப்பெருந்திரளுள்வைத்தார்பினுமுற்பேதமையாம். (௭௬௯)

வேறு.

வாதனையினாற்றத்தான்மாதவர்களநட்டானப்
போதறிந்தங்கவற்பிரிந்துபூவையர்பாற்போய்விழுந்தாங்
கேதமுறநாணாளுமிவையறிந்தென்னெதிராசன்
றீதில்லாவரங்கர்முன்பிலவனோடுஞ்செறிந்தொருநாள். (௭௭௦)

வேறு.

என்னாலானபடிபார்த்தேனிறைவாவிவனைத்திருத்துதற்கிங்
குன்னாலன்றியொருவருக்குமோயாதிவன்முன்செய்தவினை

பன்னாளிவனுக்காயடியேன்பட்டவருத்தம்பகர்வரிதால்
மின்னார்சோதிமணிமுடியாய்வேண்டும்படிசெய்திடுகவென. (எஎ௧)

செப்பிக்காட்டிக்கொடுத்தருளச்சீராரரங்கனிருதலைக்கு
மொப்பானாதலாலொன்றுமுறையாதிருந்தானுடையவருந்
தப்பிற்றந்தோவிவ்வுயிரென்றறவுஞ்சலித்துத்தமர்க்குரைப்ப
வப்பன்கூரத்தாழ்வான்வந்தடியேற்கிவனையருளென்ன. (எஎ௨)

நின்றானாழ்வானவன்கையினிகரிலெதிகடனிநாதன்
நன்றாய்த்திருத்திப்பணிகொளெனவமுதனாரைநயந்தளிப்பச்
சென்றானவன்பின்முன்னாழ்வான்பிரிந்தான்பலநாளிதங்கூறிக்
குன்றாவினையின்றொடராறுத்துக்குணமூன்றினுக்குங்குறிப்பரிய. (எஎ௩)

பேரானந்தச்சுகோததியைப்பெருக்கியவன்றன்சிந்தனையி
லாராவமுதாமெதிராசனடியாரடியாரடிபேணுஞ்
சீரார்கிளைவைக்கொடுத்தருளித்திருத்தாளிணைக்கீழ்ப்பணிவித்தா
னோரார்கூரத்தாழ்வானையொத்தார்யாவரிருநிலத்தே. (எஎ௪)

வேறு.

ஆங்கவன்றமிழ்வேதங்களனைத்தையும்வடித்தசாரத்
தோங்கியநூற்றந்தாதியுரைத்தனனுலகமுய்யப்
பாங்கினூற்றெட்டதானதிருப்பதியடைவும்பாடித்
தேங்கமழ்பொழில்சூழ்பூதூர்த்தேவனார்கழற்கீழ்வாழ்ந்தான்' (எஎ௫)

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஶ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

(கூஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

257-வது சூத்திரம். தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.

இச்சூத்திரவுரையில் இளம்பூரணத்தில் தேற்றம் 'அவனே கொண்டான்' என்றும், நச்சினார்க்கினியத்தில் 'உண்டே மறுமை' என்றும் இருக்கின்றன. இதனால், 'தெளிவினையும்....' (தொல். சொல். 261.) என்னுஞ் சூத்திரத்தால், வரும் அளபெடை பாக்ஷிகம் என்று அறிக.

260-வது சூத்திரம். விழைவின் றில்லை தன்னிடத் தியலும்.

இச்சூத்திரவுரையில் உரையாசிரியர் 'விழைவின்றில்லை தன்மை யிடத்திற்கே ஆவது.... எனவே, மற்றைய இரண்டும் எல்லாவிடத்துக் கும் உரிய என்றவாறும்' என்று கூறினர். நச்சினார்க்கினியரும் அவ் வாறே கூறினர். சேனாவரையர் 'இடம்வரையறுத்தோதாமையின், விழைவின்றில்லை தன்மைக்கண் வருதலும் மேலே பெறப்பட்டதனைப் பின்னுங்கூறினார், ஏனையிடத்து வாராதென்று நியமித்தற்கென்பது' என்று கூறினர். சேனாவரையர்கூறும்விதமே வடமொழி நூன் முறைக்குப் பொருந்தியது.

263-வது சூத்திரம். எற்றென் கிளவி யிறந்த பொருட்டே.

இச்சூத்திரவுரையில் இளம்பூரணத்தில் 'இஃது இரக்கப்பொருள் மேற்று என்பது' என்ற வாக்கியம் உளது. இதனைப்பற்றிச் சேனா வரையரும், நச்சினார்க்கினியரும் ஒன்றுங் கூறாததால், இஃது இங்கு

வேறொருவாற் சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டுமென்று தோன்றுகின்றது.

265-வது சூத்திரம். மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "மடவை மன்ற வாழிய முருகே" என மன்ற அறியாமையையே தெளிவித்தது என்றார். இங்கு அறியாமை மடவை என்ற சொல்லாற் கூறப்பட, மன்ற என்பது அதைத் தெளிவித்தது என்று அறியவும்.

266-வது சூத்திரம். தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே.

தஞ்சம் என்ற சொல் எளிமை என்ற பண்பைக்குறித்தலால், இதனை ஏன் உரிச்சொல்லாக ஆசிரியர் கூறவில்லை என்ற ஆசங்கை தோன்றலாம். மெய்தடுமாற்றத்தோடாவது, தடுமாற்றமின்றியாவது தஞ்சம் பெயராகவும், வினையாகவும் வழங்கப்படாததால் அவ்வாறு கூறவில்லைபோலும். அன்றி எண்மைக்குறிப்பு எனினுமாம்.

269-வது சூத்திரம். எல்லே யிலக்கம்.

பாடபேதம்:—உரையாசிரியர்பாடம் எல்லே விளக்கம் என்பது, சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவர்களின் பாடம் எல்லே யிலக்கம் என்பது. சைவசித்தாந்தக்கழகச் சேனாவரையப்பதிப்பில் எல்லே யிரக்கம் என்ற பாடமும் ஓர் ஏட்டுப்பிரதியில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

270-வது இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி
சூத்திரம், பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே.

இதன்பொருள்:—

உரையாசிரியர்:—இது, ஆர் என்னும் இடைச்சொல் பெயர்முன் அல்லது வாரா என்பது.

சேனாவரையர்:—இயற்பெயர்முன்னர் வரும் ஆரென்னுமிடைச்சொல் பலரறிசொல்லான்முடியும் என்றவாறு.

நச்சினார்க்கினியர்:—இருதிணைக்கும் இயலும் பெயர்க்கும் அஃறிணை இருபாற்கும் இயலும் பெயர்க்கும் முன்னர் வரும் ஆர் என்னும்

இடைச்சொல் ரஃகான் ஒற்றினை ஈறாக உடைய வினைச்சொல்லான் முடியும்.

உரையாசிரியர்மதப்படி இச்சூத்திரத்துக்குப் பொருள் வேறு; சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவர்மதப்படி பொருள் வேறு. உரையாசிரியர்மதப்படி இச்சூத்திரத்திற்கு அந்நுவயம்:— வினையோடு முடியும் பலர்க்குரியெழுத்தின் ஆரைக்கிளவி பெயர்முன்னர் இயலே என்பது. இதன்பொருள்:—வினையோடுமுடியும் அர், ஆர், ப என்ற பலர்க்குரியெழுத்துள், ஆர் என்னுங் கிளவி பெயர்முன்னர்வருவது இயல்பேயொழிய, பெயரின்முதனிலைமுன்னர்வருவது இயல்பின்று. அவர், (தொல். சொல் 162), அரசர் என்னுமிடத்து அ, அரசு என்ற முதனிலைமுன்னர் அர் என்னுங்கிளவி வருவதுபோல, ஆர் என்னுங் கிளவி வாராது. அரசன் அரசி என்றாற்போன்ற பெயரின்முன்னரே வரும். ஆதலால் வினையோடுமுடியும் பலர்க்குரியெழுத்தின் ஆரைக் கிளவி என்பது உத்தேசியம்; பெயர்முன்னர்வருவது இயல்பு என்பது விதேயம். இங்கு பெயர் என்பது ஆண்பால் அல்லது பெண்பால்விகுதி யேற்ற பெயர்ச்சொல்லை. இவ்வாறாயின் ஆரைக்கிளவிகொண்ட பெயரின் முன்னர்ப் பன்மைவிகுதிகொண்ட வினைவருவது எச்சூத்திரத்தாற் பெறப்படுமெனின் 'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும், பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும், மயங்கல் கூடா தம்மர பினவே' (தொல். சொல், 11) என்னுஞ் சூத்திரத்தால் என்னலாம். ஒருமைப்பெயரின் முன்னர் ஆரைக்கிளவிவருதல் எச்சூத்திரத்தாற் பெறப்படுமெனின் 'ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியும்......' (தொல். சொல். 27) என்ற சூத்திரத்தால் என்னலாம்.

சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவருங் கூறும் உரையின் படி, இயற்பெயர்முன்னர்வரும் ஆர் என்னும் இடைச்சொல் உத்தேசிய மாகும்; பலரறிசொல்லால்முடிதல் விதேயமாகும். இயற்பெயர்முன் னர் ஆர் என்னு மிடைச்சொல்வருமென்று விதித்திருந்தால், இங்கு அதனை உத்தேசியமாகக் கொள்ளலாம். அவ்வாறு ஒரு சூத்திரத்தி லும் விதிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. மேலும், ஆரைக்கிளவி என்பது அர், ஆர், ப என்று கூறப்பட்டவிடத்திலுள்ளதா? அதைவிட்டு வேறு? அதுவேயாயின், அது பன்மையைக்குறிக்குமிடைச்சொல்லாத லால், அதன்முன்னர்ப் பன்மைவினையே வரும் என்பது 'வினையிற்றோன்

றும் பாலறிகிளவியும்................' (தொல். சொல் 11) என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும்; இச்சூத்திரம் வேண்டா. வேருயின் இவ்வியலில் அது கூறப்படவில்லை. 'ஒருமைப்பெயர்முன்னர் ஒருமைசிதையாமல் ஆரைக்கிளவிவந்து பலரறிசொல்லான் முடிதலின், ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவியின் வேறுதலறிக' என்று சேனவரையர் கூறுகின்றனர். அவ்வாறே நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர். அவ்வாறுயின் ஆரைக்கிளவி எதனைக் காட்டுகின்றது? ஒருவரைக்கூறும் பன்மைக்கிளவி 'யாம், நீயிர், இவர்' இவையே, அரசனார் முதலியவல்ல என்று கொள்வதற்கு யாது பிரமாணம்? 'ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவியும்.........'(தொல். சொல். 27) என்னுஞ் சூத்திரவுரையில் 'தாம்வந்தார்தொண்டனார்' எனப் பன்மைக்கிளவி இழித்தற்கண்ணும் வந்ததாலெனின்' என்று சேனவரையர்கூறுகின்ருர். ஆங்குத் தொண்டனார் என்பது புன்மைக்கிளவியா, ஒருமைக் கிளவியா?

'மேலும் நம்பியார்வந்தார், நங்கையார்வந்தார் எனச் சிறுபான்மை உயர்திணைப்பெயர்முன்னர்வருதல் ஒன்றெனமுடித்தலென்பதனாற் கொள்க' என்று கூறுகின்றனர் சேனவரையர். உரையாசிரியார்மதத்தைக்கொள்ளின், இவ்வாறுகொள்ளவேண்டா.

இப்போது பதிப்பித்துள்ள இளம்பூரணத்தில் இச் சூத்திரவுரையி னிறுதியில் 'பெயர்முன் ஆரைக்கிளவி பலர்க்குரி யெழுத்தின்வினையோடு முடித்தல் இயல்பல என எல்லாப்பெயரும் அடங்க மொழிமாற்றி உரைக்க' என்ற சொற்றொடர் உளது. இந்த இயல்பல என்றசொல் சரியாய்ப் பொருள்படவில்லை. மேலும் இச் சொற்றொடரின்பொருள், 'ஆர் என்னும் இடைச்சொல் பெயர்முன் அல்லது வாரா' என்றசொற்றொடரின்பொருளொடு மாறுபட்டுள்ளது. ஆகையால், இச்சொற்றொடர் அறியாதார் ஒருவரால் ஏட்டிற்சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். இச்சொற்றொடருக்குப் பிரதியாக 'வினையோடுமுடியும் பலர்க்குரியெழுத்தின் ஆரைக்கிளவி பெயர்முன்னர் இயலே என எல்லாப்பெயரும் அடங்க மொழிமாற்றி உரைக்க' என்றிருப்பின் பொருந்தும்,

[தொடரும்.]